

# திறவுகோல்

**2053 | ஐப்பசி**

**மாத இதழ்**

**வெளியீடு:**

**மன்னையின் மைந்தர்கள் அமைப்பு.**

மண்ணின் மாற்றத்தை நோக்கி

*மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் அமைப்பை ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.*

*இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.*

*குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர், இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. மேலும் அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படையை சரிசெய்து கொடுத்துள்ளார்கள்.*

*நோக்கம்:*
*மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.*

*எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள...*
*பகிரி: +91 8220567322*

*இணையம்:*
*https://maintharkal.mannai.in/*

# தவிட்டுக் குருவிகள்

கோவிலின் "மதில் அழகு" என்ற பெயர்பெற்ற ஊரில், அழகான காலை பொழுது அது. வழக்கம் போல் அந்த பெண் வீட்டு வாசலை பெருக்கி அழகிய கோலாம் இட்டுக் கொண்டிருந்தால். அப்பொழுது வழக்கத்திற்கு மாறாக நிறைய தவிட்டுக்குருவிகள் அவள் வீட்டு வாசலில் படி கட்டுகளில் வந்து அமர்ந்து கீச்சிட்டன. அவைகள் அங்கும் இங்குமாக விளையாடி கொண்டிருந்தன. அந்த குருவிகளை பார்த்த அந்த பெண் வீட்டிற்குள் ஒடி சென்று தான் வைத்திருந்த ரொட்டி துண்டுகளை எடுத்துவந்து பொடிகளாக உடைத்து அந்த தவிட்டு குருவிகளுக்கு வைத்தால். அந்த குருவிகளும் தங்களுக்குள் சண்டையிட்டு கொள்ளாமல் ஒற்றுமையுடன் பகிர்ந்துண்டன.

அதேபோல் மாலை கூட்டுக்கு சொல்லும் பொழுதும் அந்த வீட்டு வாசலில் வந்து அமர்ந்து கீச்சிட்டன. அந்த பெண் காலை செய்தது போலவே இப்பொழுதும் ரொட்டித்துண்டுகளை உடைத்து உணவு கொடுத்தால். அந்த குருவிகளும் அவற்றை உண்டுவிட்டு கூட்டுக்கு சென்றன. மறுநாள் முதல் காலை மாலை என அந்த குருவிகள் அந்த பெண் வீட்டு வாசலில் வந்து அமர, அந்த பெண்ணும் ரொட்டித்துண்டுகளை உடைத்து அவைகளுக்கு உணவளித்து வந்தால். அது வாடிக்கையான ஒரு நிகழ்வாக மாறியது.

நாட்கள் சென்றன. ஒரு நாள் காலை பொழுதில் அந்த தவிட்டு குருவிகள் அந்த வீட்டு வாசலுக்கு வந்து அமர, அந்த வீட்டில் நிறைய மனிதர்கள் அங்கும் இங்கும் சென்று கொண்டிருந்தனர். அந்த பெண் அங்கு இல்லை என்று உணர்ந்த அந்த குருவிகள் அவ்வீட்டின் மதில் மேல் சென்று அமர்ந்து கீச்சிட்டன.

அந்த மதில் மேல் இருந்த ஒரு கம்பியில் நிறைய பூமாலைகள் மாட்டியிருந்தன. அந்த குருவிகள் அந்த வீட்டிற்குள் பார்க்க, அந்த பெண் பூமாலைகள் அணிந்தபடி ஒரு கண்ணாடி பேழையில் படுத்திருந்தாள். அவளை சுற்றி நிறைய பெண்கள் அமர்ந்து அழுது கொண்டிருத்தார்கள். அவற்றையெல்லாம் மதில்மேல் அமர்ந்து பார்த்துக் கொண்டிருந்த குருவிகள், அந்த பெண் தங்களுக்கு ரொட்டி துண்டுகளை இட வருவாள் என்ற நம்பிக்கையுடன் இருந்தன.

பின்பு வெகுநேரம் ஆகியும் அவள் வராததால் அந்த குருவிகள் அங்கிருந்து பறந்துசென்றன. மாலை பொழுதில் கூட்டுக்கு போகும் வழியில் அந்த வீட்டை அடைந்த அந்த குருவிகள், அந்த வீட்டுன் மதில் மேல் அமர்ந்து வீட்டினுள் பார்த்தன. ஆனால் காலையில் படுத்திருந்த அந்த பெண் அங்கு இல்லை. பொழுது சாயவே அந்த குருவிகள் கூட்டுக்கு

சென்றன. மீண்டும் மறுநாள் காலை வழக்கம் போல் அந்த வீட்டின் முன் குருவிகள் வந்து அமர, வெகுநேரம் ஆகியும் அந்த பெண் வரவில்லை. ஆனாலும் அந்த குருவிகள் விடாது தினமும் காலை மாலை என அந்த வீட்டின் வாசலுக்கு வந்து சிறிதுநேரம் அமர்ந்துவிட்டு செல்லும். ஆனால் அவைகளுக்கு தெரியாது, அந்த பெண் எப்பொழுதும் ரொட்டி துண்டுகளை இட அங்கு வரமாட்டாள் என்று.

--

ராம்குமார் பாஸ்கரன்.

---

## எனக்காக சிரித்ததை விட

உனக்காகவே
அதிகம் சிரித்திருக்கிறேன்

எனக்காய் அழுததை விட
உனக்காகவே
அதிகம் அழுதிருக்கிறேன்

எனக்காய் பேசியதை விட
உனக்காய்
அதிகம் பேசியிருக்கிறேன்

எனக்காக உழைத்ததை விட
உனக்காக
அதிகம் உழைத்திருக்கிறேன்

எனக்காக நடந்ததை விட
உனக்காக
அதிகம் நடந்திருக்கிறேன்

எனக்காய் தொலைந்ததை விட
உனக்காக
அதிகம் தொலைந்திருக்கிறேன்,

எனக்காக கோபம் கொண்டதை விட
உனக்காக
அதிகம் கோபம் கொண்டிருக்கிறேன்

எனக்காக வாங்கிய ஆடைகளை விட
உனக்காய்
ஆடைகள் அதிகம் வாங்கியிருக்கிறேன்,

இவையெல்லாம் கடந்த ஒரு
நாளில்
என்னைப் பார்த்து கேட்கிறாய்...
நீ யாரென!

—

மு. முபாரக்,
திருச்சி.



# வேலை

மிகப்பெரிய நிறுவனத்தில்
கணக்காளராக
வேலை செய்யும்
ராஜேந்திரன்,
எப்பாடுப்பட்டாவது
தன் மகனை இந்த
நிறுவனத்தில் வேலைக்குச்
சேர்த்துவிட வேண்டும்
என்ற கனவை
நனவாக்கிட வேண்டுமென
தன் மேலதிகாரியிடம்,
ஐயா இந்த கம்பெனியில்
ஒரு எழுத்தர் வேலை
காலி என அறிந்தேன்
எனது தாத்தா முதல்
அப்பா, அண்ணன்,
இந்த நிறுவனத்தில்
பல பதவிகளை
வகித்து சிறப்பாக
பணிபுரிந்தனர்.
எனது தம்பியும்
இங்குதான் வேலை
செய்கிறார்.
அதான் என் மகனுக்கும்
இந்த நிறுவனத்திலேயே
ஒரு வேலைப் போட்டு
கொடுங்க ஐயா
எனக் கேட்ட ராஜேந்திரனை
பொறுமையுடன்
பார்த்த  மேலதிகாரி,
உங்கள் குடும்பம்
இந்த நிறுவனத்திற்கு
நிறைய உழைப்பைக்
கொடுத்துள்ளனர்.
அதற்காக இந்த
நிறுவனம் மிகவும்
உங்கள் குடும்பத்திற்கு
கடமைப்பட்டுள்ளது.
ஆனால் இந்த காலி
பணியிடம் மட்டும்
வேறு ஒரு குடும்பத்திற்காக
கொடுத்துவிடலாமே
அவர்களும் இந்த
நிறுவனத்தால்
நன்றாக இருக்கட்டும்
நன்றி. நீங்கள்
செல்லலாம் என்று
கூறிய மேலதிகாரியை
பார்த்து
தலைவணங்கி
சென்றான் ராஜேந்திரன்.

முற்றும்.

—

எழுத்தாளர்,
மு. ஜெரோஷா.

# வாரேன்! வாழிய நெஞ்சே! - பட்டினப்பாலைக் காட்டும் கரிகாலனின் காதல் நெஞ்சம்



*திறவுகோல் வாசகர்களுக்கு அன்பின் வணக்கங்கள். சென்ற இதழில் பூம்புகார் பட்டணத்தில் வாழ்ந்த உழவர்களின் இயல்புகள் பற்றி பார்த்தோம். இதை அடுத்து வரும் 206 முதல் 215 வரையிலான அடிகள் பூம்புகார் நகரில் வாழ்ந்த வணிகர்களின் அறநெறியை பற்றியும், அறவழியில் செய்த வணிகம் பற்றியும் அழகுற எடுத்தியம்புகிறது.*

*ஆனால் திறவுகோல் பட்டினப்பாலை தொடரின் முதல் கட்டுரையாக இந்த வரிகளைப் பற்றி ஏற்கனவே எழுதி விட்டதால் இந்த வரிகளை கடந்து 212 தொடக்கம் உள்ள மற்ற வரிகளை இந்த இதழில் பார்க்கலாம்.*

*இன்று புலம்பெயர்ந்த கனடா தேசம் ஆகட்டும் ஏனைய நாடுகள் ஆகட்டும் நாம் நிம்மதியாகவும் வளமாகவும் அனைத்து உரிமைகளையும் பெற்று நமது பண்பாட்டையும் காப்பாற்றிக் கொள்ள ஏதுவாக இந்த நாடுகள் பல் கலாச்சார பண்பாட்டை போற்றிப் பாதுகாக்கும் நாடாக இருக்கிறது என்று நாம் பெருமைப்பட்டுக் கொள்கிறோம். அது உண்மையும் கூட. வளர்ந்த மேற்கத்திய நாடுகள் இன்று பின்பற்றும் இந்த பல்கலாசாரத்தை பாராட்டும் உயர்ந்த பண்பு பட்டினப்பாலை கூறும் தமிழரின் தொழில் நகரமான பூம்புகாரில் அப்போதே இருந்திருக்கிறது என்பதை எண்ணி தமிழராய் நிச்சயம் பெருமை கொள்ளலாம். ஒவ்வொரு தமிழரும் தன்னை சுயபரிசோதனையும் செய்து கொள்ளலாம். சரி பாட்டினப்பாலையின் அடிகளை பார்க்கலாம் .*

*தொல் கொண்டி துவன்று இருக்கைப்;*
*பல் ஆயமொடு பதி பழகி,*
*வேறு வேறு உயர்ந்த முதுவாய் ஒக்கல்,*
*சாறு அயர் மூதூர் சென்று தொக்காங்கு (215)*
*மொழி பல பெருகிய பழி தீர் தேஎத்துப்*
*புலம் பெயர் மாக்கள் கலந்து இனிது உறையும்,*
*முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்,*
*வார் இருங் கூந்தல் வயங்கு இழை ஒழிய*
*வாரேன்! வாழிய நெஞ்சே! கூர் உகிர்க் (220)*

*காவிரிப்பூம்பட்டினத்தில் பல நாட்டு மக்களும் பல மொழி பேசும் மக்களும் ஒன்றாக*

கலந்து வாழ்கின்றனர். திருவிழா நடக்கும் ஊரில் பல மக்கள் ஒன்று கூடி இருப்பது போல பூம்புகார் நகரில் பல இன மக்கள் கூடியிருந்தனர். அவர்கள் பல மொழியை பேசுபவர்கள். பகை இல்லாமல் நட்பு பாராட்டும் நட்பு நாட்டினர். அவர்கள் தமிழர்களோடு நட்பு கொண்ட வெளிநாட்டில வாழும் வெளிநாட்டினர்.

வேற்று மொழியினரும் வேறுபாடின்றி தமிழர்களுடன் கலந்து வாழ்ந்தனர். இதைத்தான் மேற்கண்ட அடிகள் எடுத்துரைக்கின்றது. இதன் மூலம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் பல்மொழி இனத்தவருடன் பல நாட்டினருடன் கலந்து ஒற்றுமையுடனும் இறையாண்மையுடனும் பல் கலாச்சாரத்தை போற்றும் தொண்மையுடனும் வாழ்ந்தார்கள் என்பது தெளிவாகிறது.

இவ்வாறு பட்டினப்பாலையில் 1 முதல் 220 வரிகள் வரை காவிரிப்பூம்பட்டினத்தில் அமைப்பு பற்றியும் ,நகரிலே வாழ்கின்ற மக்களை பற்றியும், தொழில் ஒழுக்கங்களை பற்றியும், அங்கே உள்ள வளங்களைப் பற்றியும் அங்கே நடக்கும் வியாபாரங்களைப் பற்றியும், குவிந்து கிடக்கும் செல்வங்களை பற்றியும்,மேலும் காவிரிப்பூம்பட்டினத்திற்கு மற்ற நாடுகளோடு உள்ள தொடர்பு பற்றியும், மற்ற இடங்களிலிருந்து வந்து குவிந்த வியாபார பொருட்களை பற்றியும் கூறி பூம்புகார் எனும் சுவர்க்க பூமியை படம்பிடித்துக் காட்டுகிறது பட்டினப்பாலை.

இத்தகைய சிறப்பினை பெற்ற காவிரிப்பூம்பட்டினத்தை எனக்கு பரிசாக கொடுத்தாலும் கூட என் அன்புக்குரிய காதலியை விட்டு நான் பிரிந்து செல்ல முடியாது அவளிடம் கூடியிருந்து வாழவே எனது நெஞ்சம் விரும்புகின்றது என்ற தலைவன் அதாவது கரிகாலன் திருமாவளவன் கூறுவதாக மேற்கண்ட அடிகலின் கடைசி மூன்று வரிகள் அமைந்துள்ளன

பட்டினப்பாலை  என்று கூறுதற்குரிய பாலைத்திணையின் உரிப்பொருளை உணர்த்தும் பகுதி இதுவாகும் . பாலைத்திணையின் உரிப்பொருள் பிரிதலும் பிரிதலுக்கான காரணமும் ஆகும். இங்குப் பிரிய மாட்டேன் என்று தலைவன் கூறுவது எப்படிப் பாலைத்திணையுள் அடங்கும்? மனத்திடம் பிரிய மாட்டேன் என்று அப்போதைக்குக் கூறினாலும், தலைவியிடம் தான் செல்லுதற்கு உரிய காரணத்தை விளக்கி பின்னர் தலைவன் பிரிவான் என்பதால் இதுவும் பாலை திணையே.

அடுத்த இதழில் கரிகாலன் வரலாற்றினை நாம் விரிவாக காணலாம்.கரிகால் சோழன் பெருமையை வரலாற்றை வரலாற்றை சுருக்கமாக 19 வரிகளில் பாடிவிட்டார் கடியலூர் உருத்திரங்கண்ணனார். அதனை 221 முதல் 239 வரையிலுள்ள வரிகளில் காணலாம் அதற்கு நீங்கள் இன்னும் ஒரு வாரம் காத்திருக்க வேண்டும். அடுத்த வாரம் கரிகாற்பெருவளத்தான் பற்றியும், பெருமையைப் பற்றியும் தமிழர்களாய் நாம் பெருமைகொள்ள வேண்டிய, கற்றுக்

கொள்ள வேண்டிய விடயங்கள் பற்றியும் பார்க்கலாம் நன்றி.

“எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு” என்று பாவேந்தர் பாரதிதாசன் குறிப்பிட்டது போன்று தமிழை நமது வளமாக போற்றி அதன் தனித்தன்மையை காப்போம்.

இதுவரை நேரம் ஒதுக்கி வாசித்த அனைத்து திறவுகோல் வாசக அன்பர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றி.

—

இளவரசி இளங்கோவன்,
மொன்றியல் கனடா.

---

# துளிப்பாக்கள்

கிழிந்த புத்தகம்
புதியதாக ஓர் அட்டை
வலையைப் பின்னும் சிலந்தி

கொடியில் ஆடைகள்
கிளிப்புகளின் வரிசையில்
ஒரு பறவையின் கால்கள்

வீட்டிலிருந்து வானை ரசிக்கிறேன்
பாவம்! ஏழை என்கிறார்கள்
இவர்கள்

அம்மா வரைந்த கோலம்
நடந்து செல்கிறது
படுத்து எழுந்த பூனை

நெட்டை பனைமரம்
மெதுவாக ஏறுகிறது
நிலா

—

சா. கா. பாரதி ராஜா,
38-3, கைலாசநாதர் கோயில் தெரு.
பெரிய நத்தம், செங்கல்பட்டு. 603002.
9944315732



# முதியோரைப் போற்று

## அக்டோபர் 1 :: உலக முதியோர் தினம்

## 01 - முதியோரைப் போற்று

அதிகாலை முதலில் எழும் சேவல்
அலுப்பு சோம்பல் போக்கும் குளியல்
அறுசுவை உணவு படைக்கும் ஆவல்
அனுதினமும் வீட்டை பாதுகாக்கும்
காவல்

அந்தகால புகழ் பாடும் ஊஞ்சல்
அகந்தை எண்ணம் இல்லாத ஊடல்
அறிவுரை சொல்லும் போது மோதல்
அருமையான பேர குழந்தைகளிடம்
காதல்

அன்பை வளர்க்கும் குணம் வளர்ச்சி
அறிவை கொடுக்கும் தன்மை பயிற்சி
அலுவலகம் ஓய்வு பெற்றும் மலர்ச்சி
அயராது உழைத்து வரும் விடாமுயற்சி

அவர்கள் அனுபவம் நம்முடைய வலிமை
அழகாக கவனிக்க வேண்டியது பெருமை
அனாதை முதியோர் இல்லம் மடமை
அவமதிக்காமல் அரவணைப்பது
அனைவரின் கடமை

## 02 - காந்தியம் வாழ்க

பேசும் பேச்சு உண்மை
உள்ளம் சொல்லும் வாய்மை
பழகும் போது எளிமை
வெள்ளை உடை தூய்மை
அன்பின் ஆதாரம் தாய்மை
பெற்றோர் மதிப்பு அருமை
ஊரார் மரியாதை பெருமை
ஆங்கிலேயரை விரட்டிய வலிமை
சிறையில் இருந்தது கடுமை
பெண்களுக்கு தரும் முன்னுரிமை
கொள்கை பிடிப்பு திறமை
சத்தியாக்கிரகம் போராட்டம் தலைமை
நாட்டின் விடுதலை கடமை
பெற்று தந்தது உரிமை

வாழ்க்கையில் வேண்டும் லட்சியம்
கடைபிடிக்க வேண்டும் முக்கியம்
முன்னேற்ற வேண்டும் அவசரம்
அனைவருக்கும் உதவுவது அவசியம்
மனிதநேயம் காக்கும் நிச்சயம்
அன்பை வளர்க்கும் தத்துவம்
உன்னை உலகை உயர்த்தும்
காந்தி மகானின் காவியம்
தினமும் சொல்லும் காந்தியம்
தொடர வேண்டும் சத்தியம்

—

எஸ்.வீ. ராகவன்,
சென்னை.

# கிளைமுறிந்த சோகத்தோடு

ஊர் திரும்புகிறது
கூடற்ற வலசைகள்...

கோடாரியோடு வந்தவனுக்கும்
அட்சதை தூவுகிறது
உச்சிக்கிளைகள்...

பீறிட்டுச் சாய்ந்தது
முதல் வெட்டிலே
அழகிய ஒத்த மரம்...

நிர்வாண வீட்டுக்கு
ஆடை உடுத்திய மரம்
நிர்வாணமாகிறது இன்றோடு...

-----------

கிணற்றடியில் ஓர் நீரூற்று
வெடித்துச் சிதறிய மரத்தில்
உதிரும் பூக்கள்
முத்திய நெற்றோடு
புடைத்த குழைகள்
ஒத்த வீட்டில்
அழுகும் மழலையின் குரல்
மூலையிடுக்கினுள் நிமிரும் மாடம்
தும்பு தெறித்த
சினைக்கிடாரியின் செருமல்
நிலவை உமிழும் பூவானம்
பூந்தென்றலை விழுங்கும் இரவு
பாதை வடிக்கும் மின்மினி
கட்டற்ற வெளியில்
ஆழத்துயிலும் உயிரற்ற உடல்கள்
யாவும் இவைகள்
கிழிந்த இதயத்தை
தைத்து விடுகின்றன...

-----------

அகலப் பட்டியக்கல்லின் மேல்
நெத்தி நீர் பூக்க
நுரை பொங்கி வடிய
துவைத்துக் கொண்டிருந்தேன்
கிளை வளைந்த
இரட்டைக் கொய்யா மரத்தை
கொஞ்சி மகிழும்
கரிச்சான் குருவிகளின்
க்ரீச் க்ரீச் என்ற ரீங்காரம்
மணற்படுகையில்
நெடிய பாயும்
கடலலையாய்
சிறுநாளிகை
வறண்ட போன
இருண்ட காதினில்
தழும்ப பாய்கிறது...

-----------

கட்டற்ற வெளியில்
பெய்திடும் வெந்நுரை பனி
அலகை நீட்டும்
வானம்பாடியிடம்
மெல்ல திறந்து விடுகிறது
பூப்பெய்திய
பொன் வானத்தின்
மார்கழி வாசலை...

-----------

கதிரறுத்து சூடடித்து வந்தவள்
மீண்டும் செல்கிறாள்
சண்டு புடைக்க
கூலிக்காக அல்ல
கூப்பாடு போடும்
கூட்டுப் பறவைகளுக்காக...

-----------

புதையுண்ட அடிசகதியில்
பூத்து மேலெழும்
செங்காந்தள்களின் முகத்தில்
வீசும் பிறையின்
இரவின் திசையில்
காய்ந்து உறைந்தன
இரத்தத்தின் பிசுபிசுப்புக்கள்...

-----------

காலாறிவிட்டுச் செல்லும்
கூடுகள் இழந்த பறவைகளோடு
மஞ்சள் வடியும்
மங்கையர் மாலையில்
பிடிச்சோற்று
கிண்ணத்துப் பருக்கையில்
பசியாற்றிச் செல்கிறது
தாயில்லா பிள்ளை
நதிக்கரை படியில்...

-----------

சாய்த்துவிட்டுப்போனது
பூவரும்பிய மரத்தை
வேரோடு புழுதிவார் காற்று
எனினும்
மார்பிலே தாங்கி
மடியிலே வாங்கி
மறுபூக்கச் செய்தாள்
நிறைசூல் பூமித்தாய்...

-----------

முண்டித்தவிக்கிறது நாக்கு
பல்லிடுக்கினுள் சிக்கிய
வெள்ளாட்டு எலும்புடன்...

கிடத்தி அமர்கிறாள்
மீண்டும் எழும்புகிறது
மழலையின் குரல்...

கெழக்கு வானம்
திறந்து விடுகிறது
கூரையின் ஒத்த வாசலை...

-----------

நதிகள் மடியமர்த்தும்
மணல் வெளியில்
புதைந்து கிடக்கிறது
மெல்லிய பூங்கண்கள்
கசிய சிவந்து
கீச்சிடும் உதடுகள்
வெடித்துச் சிதறிய
ஈரமான அன்பின் சொற்கள்...

-----------

விருட்டெனப் பறக்கிறது
காய்ந்த புற்றை கரைக்கும்
ஈர மழை

நெடிய வகுடெடுக்கிறது
பந்தற்கொடி
பூக்கும் காலம்

ஊற்றிக் கொண்டிருக்கிறது
கண்களின் தீராத ஊற்று
அலைபாயும் மேகங்கள்

-----------

வெய்யில் உச்சத்தின்
மாந்தோப்பில்
இளைப்பாறும்
தேன் சிட்டுக்கள்
உதிர்த்து விட்ட
மெல்லிய இறகொன்று
பிரபஞ்சத்தின் திறவுகோலாய்
திறந்து விடுகிறது
மௌனிக்கும் பூங்கண்களை...

-----------

ஊர் கூடி பார்த்த முகம்
முச்சந்தியோடு திரும்புகிறது
இறுதி ஊர்வலம்...

சுண்டி இழுக்கிறது
இலவம் பஞ்சு
நிமிரும் மாடத்தீபம்...

கேட்டு அழுதன
அணில் குஞ்சுகள்
வாய் திறக்கும் தாழிப்பானை...

-----------

அவள்
உரித்து தொங்கவிட்ட
சொற்களின்
நிர்வாணத்தை
நிலைக்கண்ணாடியில் பார்த்தேன்
எதிர்மறை பிம்பமாய்...

-----------

பெண்மையெங்கே
தெரியப்போகிறது
வடுக்கள் சிதறிய
பொந்துகளில்
ஆழப்புணரும்
ஆண்கத்திகளுக்கு...

-----------

நீட்டியமர்ந்த தாழ்வாரத்தை
நிலைகுலைத்து விட்ட
பெருங்காற்றின் அபத்தம்
நகக்கனுவிலேறிய முட்களாய்
மென்மார்பில்
துடிக்கும் வலியாய்
விடாமல் தொடர்கிறது
இழந்த குடிசைகளை நினைத்து...

-----------

நிர்வாண முள்வேலியில்
நிலைதொங்கிய
கள்ளிப்பழங்கள்
நுகர்கிறது
தொட்டழையும்
ஈரமார்பின்
முத்தக்காற்றை

ஒவ்வொரு முறையும்
இவள் சீலை துவைத்து
காயப்போடும் போதெல்லாம்...

-----------

இடைமச்சங்களின்
நிரம்பல்களாய்
உரிக்கப்பட்ட சொற்கள்
திமிறிக்கொண்ட களத்தில்
சுரக்கும் தேனாய்
அகல இதழ் வடிக்கும்
கிண்ணத்து பாலாய்
வழிந்து கொழியும்
நிரம்பல்களை
ஏந்தி வருடுகிறது
மெல்லிய நா...

-----------

பறவையின் எச்சம்
தாளப் பறக்கிறது
ஏந்தும் கிளைகள்...

பூச்சொரியும் மழையில்
புன்னகைக்கிறது
மற்றுமோர் வானவில்...

கூழாங்கற்களை
காற்சிலம்பாக்கியது
சுழலும் ஓடைநீர்...

-----------

தீண்டிச்செல்லும் காற்றுடன்
தலைநீட்டியது
அழகிய
பூவனங்கள் மட்டுமல்ல

முற்றிலும் உதிர்ந்த
மொட்டையில்
மிச்சமிருக்கும்
மயிரிழைகளும் கூட

-----------

சாயும் மரத்தின்
இறுதி மூச்சு
சடசட ரீங்காரம்...

கான்கிரீட் கரையால்
தடமாறிப்போனது
ஊர்மெச்சிக்குளம்...

வெந்த பிறகு
உயர்ந்தாள் மலமலவென
குட்டைப் பொன்னி...

சாரல் மழையிலும்
திக்கு முக்காடியது
சன்னதி வீதி...

வெள்ளாடு வாங்கப் போய்
வெடக்கோழி வாங்கி வந்தான்
வெசமான விலையேற்றம்...

—

ப.அ.ஈ.ஈ. அய்யனார்.

# உயிரை துச்சமென மதித்து கொடி காத்த குமரன்

தாயின் மணிக்கொடிக்காக தன் இன்னுயிரை ஈந்தவர் திருப்பூர் குமரன். தாய் தந்தை இருவரும் நெசவாளர்கள். கூடப்பிறந்தவர்கள் ஏழு பேர். வறுமையால் குடும்பம் கப்பல் ஆட்டம் கண்டது. நாச்சிமுத்து - கருப்பாயி தம்பதியினர் குழந்தைகளை ஆளாக்க மிகுந்த சிரமப்பட்டனர். விரக்தியினால் தவறான முடிவை எடுக்காது குடும்பத்தை அரண் போலக் காத்து வந்தனர். குடும்பச் சூழ்நிலை காரணமாக ஐந்தாம் வகுப்புடன் பள்ளிப் படிப்பு முடிந்தது குமரனுக்கு. தங்களிடம் குமரனை வைத்துக் கொள்ளாமல் பள்ளிப்பாளையத்திற்கு மாமன்மார் வீட்டிற்கு அனுப்பி வைத்தனர்.

நல்ல உள்ளம் கொண்ட அவர்கள் இருவரும் தாங்கள் செய்து வந்த நெசவுத்த தொழிலை குமாரசாமிக்கு கற்றுக் கொடுத்தனர். குடும்ப நிலை அறிந்து வெகு சீக்கிரத்தில் நெசவு நெய்வதைக் கற்றுக் கொண்டான் குமரன். தன் காலில் நிற்கும் நிலை வந்தவுடன் மாமன்மார்களிடம் விடைபெற்றுக் கொண்டு சென்னிமலைக்குத் திரும்பினான் குமரன். கைத்தொழில் பிழைப்புக்கு வழிவகை செய்யும் என பெற்றோர்கள் மகிழ்ந்தனர்.

நெசவுத் தொழிலால் குடும்பத்தை பீடித்த பீடு நீங்கியது. குடும்ப வறுமையும் மெல்ல மெல்ல விலகத் தொடங்கியது. சொந்தக் காலில் குமரன் நிற்கவே பெற்றோர்கள் அவருக்கு திருமணம் செய்ய முடிவு செய்தனர். குமரனுக்கு பத்தொன்பது வயது கைப்பிடித்த இராமாயிக்கோ பதினான்கு வயது. தனிக்குடித்தனம் வந்த குமரனால் குடும்பத் தேவைகளை கிடைத்த வருவாயைக் கொண்டு பூர்த்தி செய்ய முடியவில்லை. வேதாளம் முருங்கை மரமேறிய கதையாக மீண்டும் குடும்பத்தை வறுமை பீடித்தது.

நெசவுத் தொழில் வேலைக்கு ஆகாது என முடிவெடுத்து தந்தையின் சொல்படி ஈரோட்டிற்கும், பிறகு திருப்பூருக்கும் குமரன் வேலைதேடி சென்றான். திருப்பூரில் பஞ்சு அறைக்கும் தொழிற்சாலையை கூட்டாக நடத்திவரும் சென்னியப்பன், ரங்கசாமி என்ற நண்பர்களிடம் வேலை கேட்டார். அவர்களும் குமாரசாமி மீது நம்பிக்கை வைத்து டேலி கிளர்க் வேலையை கொடுத்தனர். மிகவும் கஷ்டமான அந்த வேலையையும் குமரன் திறம்பட செய்து வந்தார். குடும்ப நிர்வாகத்தை சிக்கனமாக இராமாயி நடத்தி வந்தாள். வாழ்வில் அன்பும், மகிழ்ச்சியும் இருந்தாலும் குழந்தை இல்லையே என்ற குறை இருந்தது.

குமாரசாமி ஐந்தாம் வகுப்பு வரை மட்டும் படித்திருந்தாலும். அவருக்கு வாசிப்பின் மீது மிகுந்த ஈடுபாடு இருந்தது. தனது அறிவை விசாலமாக்கிக் கொள்ள நிறைய நூல்களை

வாங்கிப் படித்தார். தேவாரமும், திருவாசகமும் அவரது மனதைக் கவர்ந்தன. தவறாமல் அந்நூலை வாசிப்பதை வழக்கமாக்கிக் கொண்டார். உலகை நிர்வகித்து வரும் பேரண்ட சக்தி மீது குமாரசாமிக்கும் ஈடுபாடு வந்தது. விதிப்பயன் தானோ என்னவோ குமரனுக்கு திருக்குறள் அறிமுகமாகியது.

வாழ்வுநெறி கூறும் திருக்குறளிடம் தனது உள்ளத்தைப் பறிகொடுத்தார். திருக்குறள் உரைக்கும் அறமும் காந்தியமும் ஒன்றென உணர்ந்தார். காந்தியடிகளை இதயக் கோயிலில் வைத்து கடவுளாக பூஜித்தார். ஆயுதமும், வன்முறையும் எந்த பிரச்சனைக்கும் முடிவு ஆகாது. அநியாயத்தை நீதியின் மூலமாகத்தான் எதிர்க்க வேண்டும். தவறைச் சுட்டிக் காட்டி உணரச் செய்யவேண்டும்.

உணர்ந்து திருந்திக் கொண்டால் அவன் மனிதன். அதையொரு பொருட்டாகவே கருதவில்லையென்றால் அவன் மிருகம். இம்சையா, அகிம்சையா எது சுவர்க்கத்துக்கான பாதை. சட்டம் பேசுகிற உங்களுக்கு நல்லறம் தெரியாதா? அடிமைப்படுத்துதல் என்பது கொடுங்கோன்மைவாதிகளிடமிருந்து எழும் பாசிச எண்ணம். அது ஒருநாள் உன்னையும் அளிக்கும்.

நாங்கள் அமைதியின் தூதர்கள் ஏசுங்கள் பொறுத்துக் கொள்வோம் தாக்குங்கள் திருப்பித் தாக்க மாட்டோம். உயிரே போனாலும் எங்கள் லட்சியம் ஒன்றுதான் அது தேசத்தின் சுதந்திரம். நான் வேறு நாடு வேறல்ல. எனக்கு இரண்டு முறை இறக்க வாய்ப்பு கிடைத்தால் நாட்டுக்காகவே உயிரிழப்பேன். அடக்குமுறைகள் போராட்டங்களை நீர்த்துப் போகச் செய்துவிடுமென்று எண்ண வேண்டாம். ஆறிலும் சாவு நூறிலும் சாவு நடக்கப்போவது பரந்தாமன் கையில் யோசித்துக் கொண்டிராமல் வீதியில் இறங்குங்கள் செய் அல்லது செத்துமடி என்றார் காந்தி.

வாழ்ந்தால் முப்பதுகோடி முழுமையும் வாழ்வோம் வீழ்ந்தார் முப்பதுகோடி முழுமையும் வீழ்வோம் என்பது காங்கிரசின் கொள்கையானது. பத்தோடு பதினொன்றாக அல்ல நாங்கள் கொள்கைகளை விதைத்துவிட்டுச் சாகிறோம். எதையும் அறிவுப்பூர்வமாக யோசியுங்கள். அப்போதுதான் எது தர்மம் எது அதர்மம் என்று தெரியவரும். வழித்துணைக்கு சூரியன் தேவையில்லை சிறிய மெழுகுவர்த்தியே போதும் என்ற காந்தியின் கருத்துக்களை குமாரசாமி பத்திரிகை வாயிலாகப் படித்துதெரிந்து கொண்டார்.

துப்பாக்கி பீரங்கிகளுக்கு மத்தியில் அன்புதான் உலகை ஆளும் என்ற காந்தியின் கொள்கை குமாரசாமிக்குப் பிடித்திருந்தது. குமாரசாமி நெஞ்சில் விடுதலை நெருப்பு கனன்று எரிந்த வண்ணம் இருந்தது. காந்தியிடம் கொண்ட பற்றால் கதராடை உடுத்தலானார். ஒவ்வொரு

நாளும் இராட்டையில் நூல் நூற்பதைத் தம் கடமைகளுள் ஒன்றாக எண்ணினார். ஆங்கில அரசு வரி என்ற பெயரில் மக்கள் இரத்தத்தை உறிஞ்சியது. பாட்டாளி முதல் பணக்காரர்கள் வரைப் பயன்படுத்தும் உப்புக்கு வரிவிதித்ததைக் கண்ட காந்தியடிகள் மிகவும் வருந்தினார்.

அடித்தட்டு மக்களைப் பாதிக்கின்ற அந்த உப்பு வரியை எதிர்த்து உப்பு சத்தியாகிரகம் என்னும் அறப்போராட்டத்தைத் தொடங்கினார். தான் தண்டியிலிருந்தும் இராஜாஜி வேதாரண்யத்திலிருந்தும் உப்புச் சட்டத்தை மீறி உப்பு எடுப்பார்கள் என அறிவித்திருந்தார்கள். தமிழகம் காந்தியின் சொல்லை வேதவாக்காக ஏற்றது. உப்பு சத்தியாக்கிரகப் போராட்டத்தில் கால்நடையாக கலந்து கொள்ள விரும்பிய தொண்டர்கள் திருச்சி நோக்கி படையெடுத்தார்கள். வேதாரண்யத்திற்குச் செல்லும் நாளுக்காக காத்திருந்தார்கள்.

குமாரசாமியின் காலும் கையும் பரபரத்தது. தானும் பங்குபெற வேண்டுமென உத்வேகம் கொண்டார். ஆனால் குடும்பத்தினர் குமாரசாமியை ஊர் எல்லையைத் தாண்ட விடவில்லை. குமாரசாமி தனது இயலாமையை எண்ணி மனம் நொந்தார். உப்பு சத்தியாக்கிரகப் போராட்டத்தோடு அந்நியத்துணி பகிஷ்கரிப்பு, கள்ளுக்கடை மறியலும் சேர்ந்து கொண்டது. நிலைமை மோசமாவதை உணர்ந்த வைஸ்ராய் இர்வின் பிரபு காந்தியடிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த உடன்பட்டார்.

அந்த ஒப்பந்தம் கரையோர மக்கள் இலவசமாக உப்பு எடுத்துக் கொள்வதற்கான உரிமையை வழங்கியது. இந்த வெற்றியால் சத்தியாக்கிரக போராட்டத்தைக் கைவிட்ட காந்தி அந்நியத் துணி புறக்கணிப்பு, கள்ளுக்கடை மறியல் போராட்டம் தொடரும் என்றார். அந்தப் போராட்டத்தில் குமாரசாமி கலந்து கொண்டார். துணிக்கடையில் மறியலில் ஈடுபட்ட போது, ஆத்திரம் கொண்ட கடைக்காரர்கள் அந்த தொண்டர்கள் கட்டுக் கட்டாய்ப் பட்டாசுகளை கொளுத்திப் போட்டனர்.

அது கூட்டத்திலிருந்த குமாரசாமியின் முகத்தையும் பதம் பார்த்தது. அதனால் அவருக்கு முகத்தில் புண் ஏற்பட்டது. இதையறிந்து குடும்பத்தினர் துடிதுடித்துப் போனார்கள். இனி தாங்கள் பட்டாசுகளை தொடுவதில்லை என உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

திருப்பூர் தேசபந்து வாலிபர் சங்கத்தில் குமாரசாமி தன்னை இணைத்துக் கொண்டார். வெள்ளைய ஏகாதிபத்தியத்தை எதிர்த்து அவர்கள் களம் கண்டனர். இர்வினுக்குப் பிறகு அரசப் பதவிக்கு வந்த வெலிங்டன்பிரபு போராட்டக்காரர்கள் மீது அடக்குமுறையை பயன்படுத்தி அவர்களை ஒடுக்க நினைத்தார். காந்தி — இர்வின் ஒப்பந்தத்தை மீறியது

மட்டுமல்லாமல் காங்கிரஸ் கட்சியை தடை செய்தார். பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள் நடத்த தடைவிதிக்கப்பட்டன போராட்டக்காரர்கள் மீது அடக்குமுறை என்ற பெயரில் வன்முறை கட்டவிழ்த்துவிடப்பட்டது.

இதன் மூலம் சட்ட மறுப்பு இயக்கத்தை தோற்கடித்துவிடலாம் என அரசாங்கம் எண்ணியது. அடக்குமுறையை அரசாங்கம் பிரயோகித்தபோது அதற்கு எதிரான போராட்டமும் வலுவடைந்தது. எல்லா இடங்களிலும் காங்கிரஸ் கமிட்டி கலைக்கப்பட்டது. காந்தி கைது செய்யப்பட்டார். வெகுண்டெழுந்த காங்கிரஸ்காரர்கள் மீது வன்முறை ஏவப்பட்டது. அறப்போராட்டத்தில் ஈடுபட்டவர்களும் தாக்கப்பட்டனர். இத்தனைக்குப் பிறகும் அறப்போராட்டக்காரர்கள் அகிம்சையையே கடைப்பிடித்தனர்.

திருப்பூரிலும் காந்தியின் கைதை எதிர்த்து அறப்போர் தொடங்கியது. அந்தப் போராட்டத்தில் குடும்பத்தின் எதிர்ப்பையும் மீறி குமாரசாமி கலந்து கொள்ள தீர்மானித்தார். பொதுக் கூட்டத்தில் காந்தி கைதை கண்டித்து கண்டனத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்தின் இறுதியில் பத்தாம் தேதி காலை அறப்போர் ஆரம்பமாகும் என்றும் அந்த முதல் கோசுடிக்குச் ஈசுவரமூர்த்தி தலைமை ஏற்பார் என்றும் அறிவிக்கப்பட்டது. அந்த கோஷ்டியில் குமாரசாமியும் ஒருவர். தலைமைப் பொறுப்பிலிருந்து ஈசுவரமூர்த்தி சொந்தக் காரணமாக விலகிக் கொண்டதால் சுந்தரம் தலைமை ஏற்றார்.

சுந்தரம் தமக்கு முன்பாக அறப்போராட்டத்தில் ஈடுபட உள்ள ஒன்பது பேரையும் தனித்தனியாகப் பார்த்தார். ஒல்லியாக இருந்த குமாரசாமியிடம் அடித்தால் வலிதாங்க மாட்டான் என்றெண்ணி விலகிக் கொள்கிறாயா என்று கேட்டார். அங்கிருந்த தொண்டர்களில் ஒருவர் ஐயா அவர் தோற்றத்தைக் கண்டு எடை போடாதீர்கள் உடல்வலுவும் மனவலுவும் அவருக்கு அதிகம். நம்மையும் தேசத்தையும் காந்தியையும் உயிரென மதிப்பவர். தனது குடும்பத்தின் எதிர்ப்பையும் மீறி இங்கு வந்துள்ளார். அவருக்கு பக்க பலமாக இருப்பதை விட்டுவிட்டு இப்படிச் சொல்லக்கூடாது என்றார்.

பிறகு வந்தே மாதரம், பாரத மாதாவுக்கு ஜெ, மகாத்மா காந்திக்கு ஜே என்று கோஷமிட்டமாறு தொண்டர் படை கிளம்பியது.

தெருவில் இருமருங்கிலும் திரளான கூட்டம் அவர்களை வேடிக்கைப் பார்த்தது. அவர்களில் சிலர் தொண்டர் படையோடு சேர்ந்து கோஷம் எழுப்பினார்கள். குமாரசாமி குழுவின் முன்னால் வேகவேகமாக கொடியைப் பிடித்தபடி நடந்து கொண்டிருந்தார். தொண்டர் படை காவல் நிலையத்தை அடைந்ததும் காவலர்கள் கூட்டமாக வந்து

அவர்களை லத்தியால் தாக்கத் தொடங்கினர். தேசியக் கொடியை அவர்களிடமிருந்து பிடுங்கி எறிந்தனர்.

இதற்கு குமாரசாமியும் தப்பவில்லை. அவரது மண்டை பிளந்து ரத்தம் கசிந்தது. கைகள் தேசியக் கொடியை மண்ணில் விழாதவாறு கெட்டியாகப் பிடித்திருந்தது. தலையில் பட்ட அடி மூளையைத் தாக்கியதும் குமாரசாமியின் உடல் மண்ணில் சரிந்தது. போராட்டக் களத்தை இரத்தக்களறியாக்கிவிட்டு காவலர்கள் அங்கிருந்து சென்றனர்.

குமாரசாமியுடன் சேர்த்து மூன்று உடல்கள் ரத்தம் கசிந்த நிலையில் ஈக்கள் மொய்த்த வண்ணம் நடுத்தெருவில் கிடந்தது. சிறிது நேரத்திற்குப் பின் ஒரு வாகனம் வந்து அம்மூன்று உடல்களையும் தூக்கிப்போட்டுக் கொண்டு மருத்துவமனைக்குச் சென்றது. சிதறிக்கிடந்த தொண்டர்களை ஓசைப்படாமல் அவர்களது உறவினர்களும் தொண்டர்களும் சிகிச்சையளிக்க எடுத்துச் சென்றனர். மூவரில் குமாரசாமிக்கு மூளை செயலிழந்ததால் பாதிப்பு அதிகமாகியது.

பிழைப்பது கஷ்டம் என்றாலும் கூடியிருந்த கூட்டத்தினர் தாக்கலாம் எனக் கருதி விசயத்தை வெளியிடாமல் மருத்துவர்கள் மறைத்து வந்தனர். வலி வேதனையால் குமாரசாமி ஏதோ முணுமுணுப்பது தெரிந்தது.

1932ம் ஆண்டு சனவரி மாதம் 11 ஆம் நாளன்னு விடியற்காலை குமாரசாமியின் உயிர் பிரிந்தது. சுதந்திரத்திற்கு பிறகு குமாரசாமிக்கு தியாகி என்ற பட்டம் கிடைத்தது. தேசியக் கொடியின் மாண்பினைக் காத்த குமரனுக்கு இன்னொரு வீர வணக்கம்.

—



ப. மதியழகன்,
தேசிய மேல்நிலைப்பள்ளி தமிழாசிரியர்,
115, வள்ளலார் சாலை,
ஆர்.பி. சிவம் நகர்,
மன்னார்குடி - 614001.
திருவாரூர் மாவட்டம். தமிழ்நாடு,
கைப்பேசி: 9597332952 | பகிரி: 9384251845

# அனல் காற்று (சிறுகதை)

மரத்துக்கு பின்னால் ஒரு மறதியை போல அமர்ந்திருந்தாள் இன்பலட்சுமி.

உதவி செய்த போன் சொன்ன அடையாளம் ஒத்தை புளியமரம். அடித்து பிடித்து ஓடி வந்த ரத்னா... அவள் அருகே ஓர் அன்னையை போல நெருங்கினான். நெக்குருகும் பார்வை அவனுக்கு.

பார்த்ததுமே..... "மாமா......!" என்று அமர்ந்தபடியே தாவி கழுத்தைக் கட்டிக்கொண்டு ஏங்கி ஏங்கி அழுகை அடக்கினாள் இன்பலட்சுமி.

"என்னாச்சு இன்பா....ஏன் இங்க உக்காந்துருக்க... என்னமோ மாதிரி இருக்க... நீ எப்போ இங்க வந்த... உன்ன யாரு இங்க தனியா வர சொன்னா... இங்க என்ன பண்ணிட்டு இருக்க.. இங்க எப்பிடி....." மூச்சு விடாமல்தான் கேட்க முடிந்தது அவனுக்கு. திடுதிப்பென்று அவளைக் கண்டதில் கன்னத்தில் துடிக்க ஆரம்பித்திருந்தன கண்கள். கண்கள் சுழலும் காட்சியில்... கோணல் மாணல் சுற்றுப்புறங்கள் தான் உணர்ந்தான். உள்ளே என்னென்னவோ தடுமாற்றம். இல்லாத ஊஞ்சல் இதயத்துக்கு பக்கத்தில் தாறுமாறாக அசைந்தது.

"சரி சரி அழாத.. வந்துட்டேன்ல..." என்று மீண்டும் தலையை தடவி நெற்றியை வழித்து.. முகத்தை துடைக்க... கண்களில் சூடான நீர் கோடுகள் கரகரவென கொட்டியது.

"ஐயோ என்னாச்சு... என் புள்ளைக்கு...! ஏய்... என்னடி இது...?" கழுத்தை பிடித்து நிமிர்த்தி முகத்தை ஏந்தினான்.

கண்களில் கலவரம்.... கன்னத்தில் கடி பட்ட காயம்... சோர்ந்து போன கழுத்தில் மூத்திர வாசம்..

அவளுடம்பில் ஆங்காங்கே திட்டு திட்டாய் ஆம்பள ஒழுகல்...

"நினச்சன்... நினச்சேன்..."

அவளை விட்டு தன்னையே பற்றிக் கொண்டு தலையில் கை வைத்து உடலை காற்றினில் சரித்து மூச்சு வாங்கினான். வெளியெங்கும் காற்றில்லை. வியர்வை சுருளும் பகலில் குறி குறியாய் தொங்குவது போல உணர்ந்தவளுக்கு குமட்டிக் கொண்டு வந்தது. பக்கத்தில்

மரமொட்டி ஒரு வழிகாட்டியாக... பூமி சதுரம் தான் என அடித்து சொல்வது போல இருந்த பெட்டி கடையில் நீர் வாங்கி வந்து முகத்தை கழுவி விட்டான். குடிக்க கொடுத்தான்.

"அழுகாத.... அழுகாம சொல்லு பாப்பா..."- அதட்டினான். அதட்டும் போது தான் பாப்பா வரும் என்று அவளுக்கு தெரியும். பிறந்ததில் இருந்தே கூடவே இருக்கும் மகராசி. அத்தை புள்ளன்னு தான் பேர். ஆனா ஆண்டவன் புள்ள அது. அவன் ஆழ்மனதில்... அன்பின் அரிப்பு தவியாய் தவித்தது.

"ஆமா... ஆறு மாசமா நீ ஊருக்கு வரவே இல்ல... அதான் என்னாச்சுன்னு பாக்கலான்னு வந்தேன்..."

அவளையே அழுத்தமாய் பார்த்து விட்டு..." சரிடி..... எனக்கு போன் பண்ண வேண்டியது தான... சரி எப்போ வந்த.. எங்கன்னு போயி....என்ன ஆச்சு... ?" அவன் அவளையே ஊடுருவினான். புள்ளையை சலித்து விட்டிருக்கிறார்கள் என்று புரிந்து விட்டது. உடல் முழுக்க சூடு பரவ... அவள் கண்களில் வலி.

"சொல்லு....." கத்தினான்.

"உன் அட்ரஸ் காட்டி ஒவ்வொருத்தர்கிட்டாயா கேட்டுட்டு இருந்தேன்.. ஒருத்தன் பாத்துட்டு... எனக்கு தெரியும்னு சொல்லி கூட்டிட்டு வந்து இங்க தான் இந்த வீதில தான் ஒரு வீட்டுல விட்டான். அந்த வீட்டுல இருந்த சனியன் என்னைய அடைச்சு வெச்சி.... கட்டி வெச்சிட்டு... அவன் கூட இன்னும் ரெண்டு பேரு மாமா... அம்மணமா சுத்தி நின்னுட்டு..." நெஞ்சு நெஞ்சாய் அடித்துக் கொண்டாள்.

"பாத்து பாத்து உனக்குன்னு சேத்து வெச்சது எல்லாம் புடுங்கி தின்னுட்டானுங்க... திருட்டு தேவிடியா பசங்க..." மீண்டும் நெஞ்சு நெஞ்சாய் அடித்துக் கொண்டாள்

"ஐயோ முட்டாள் முட்டாள்... இதுக்கு தான் படி படினு தலை தலையாய் அடிச்சுகிட்டேன்..." அவளை பார்த்து பார்த்து குலுங்கினான்.

"ஐயோ மாமா.. நான் படிக்கவா பொறந்தேன்... உன்ன பாத்துக்கதான மாமா பொறந்திருக்கேன்.." என்றவளை அதற்கு மேல் திட்ட முடியவில்லை. இப்படியா ஒருத்தி இருப்பா.. ஒரு விவரமும் தெரியாம இப்படி வந்து... என்னன்னு இத சரி செய்யறது..."

"போலீசுக்கு போலாம் எந்திரி..." என்றான்.

"எதுக்கு மூணு பேரு பாத்ததை முழு ஊருக்கும் சொல்றதுக்கா..."

ஒரு கிறுக்கியை போல கழுத்தை அசைத்து பாவமாய் கேட்டவளை... ஒரு கணம் தீர பார்த்து...விட்டு... "ஐயோ சாமி.... என் புள்ளயே இப்பிடி பண்ணிருக்கானுங்களே..." ரத்னா தலை தலையாய் அடித்துக் கொண்டான்.

"இந்த வருஷம் வேலை பெர்மனண்ட் ஆகிடும்.. அப்புறம் வந்து கூட்டிட்டு வந்தர்லான்னுதான நினைச்சேன்.. அதுக்குள்ள உன்ன யாருடி பைய தூக்கிட்டு இங்க வர சொன்னது...." முடியை பிடித்து ஆட்டினான். ஆட்டிக் கொண்ட உள்ளங்கை அழுந்த உச்சந்தலை அழுத்தி தோளோடு சாய்த்துக் கொண்டான்.

"நியாயம் கேட்டே ஆகணும்... இதை விட்ற முடியாது..." முனங்கினான்.

பெட்டிக்கடை காரருக்கு விஷயம் புலப்பட்டு விட்டது...

"என்ன நியாயத்தை தம்பி கேப்ப... அவன்.... அவன் ஊரை அடிச்சு உலைல போடறவன்... பொறுக்கி பைய....பணம் ஆளு அரசியல்னு இந்த ஊருக்கே அவன் தான் ராஜா.... போலீசு அவன் காலுக்குள்ள.. ஒன்னும் பண்ண முடியாது..." காத்துவாக்கில் குரல் தான் அவர் என்பது போல பேசினார். பேச்சில் அனுபவம் பெட்டிக்கடையை சுற்றும் அனல் காற்று போல சுழன்றது.

"இல்லங்கய்யா.. இப்பல்லாம்.. நம்மள மாதிரி ஏழை பாழைங்களுக்கு கோர்ட் கை குடுக்குது.." குருவி தலையில் பனங்காய் கொண்டவன் போல கழுத்து அழுந்த பேசினான். நம்பிக்கையை எங்கிருந்தாவது கொண்டு வந்து தன் மீது கவிழ்த்துக் கொள்ள... உள்ளே ஒரு வெறியை அவனே உருவாக்கிக் கொண்டிருந்தான்.

"எங்க தம்பி... பத்து கேஸ்ல ஒன்னு தான் நீ சொல்ற மாதிரி நியாயத்து பக்கம் நின்னு ஜெய்க்குது.. மீதிக்கெல்லாம் பணம் தான் ஜெய்க்குது.." பெரும் அனுபவம்... அது சுய அனுபவமாகவே இருந்திருக்க வேண்டும். பிழையற்ற தீர்க்கம் தன்னை ஒளித்துக் கொள்வதில் அவரிடம் ஒரு பாதுகாப்பு வளையம் இருந்தது.

"ஏதும் வலி இருக்கா.....?" என்று இன்பாவின் முகத்தை பார்த்தாலும்... கண்கள் கீழே பரிதவிப்போடு ஆராய்ந்தது.

"இல்ல மாமா.. நீ ஒரு வாட்டி ஏதோ புஸ்தகத்தை படிச்சிட்டு ஒரு பழமொழி

சொன்னீல்ல... தப்பிக்க முடியாதுனு தெரிஞ்சிருச்சுனா அதை அனுபவிச்சிடணும்னு.... அப்பிடி தான் நினைச்சுக்கிட்டேன்... எவ்வளவோ போராடி பாத்தன்... தடி மாடுங்க மாதிரி இருக்கானுங்க... எழும்ப முடியல.. பேசாம உன்னய நினைச்சுகிட்டு படுத்துகிட்டன்.. உசுராவது மிஞ்சட்டும்ன்னு..." தம் கட்டி பேசியவள் வாயில் இருந்து எச்சில் வழிய ஒரு பெருஞ்சாவு அழுகை தொண்டைக்குள் அங்கும் இங்கும் ஒரு நாயின் நாக்கோடு அலைந்தது. என்ன தான் செய்ய என்ற வேதனையின் நடுக்கத்தில் ரத்னாவுக்கு தலையை சுற்றிக் கொண்டு வந்தது. இந்த மரத்தில் முட்டிக் கொண்டு செத்து விட தோன்றியது. அவளை தோளோடு சேர்த்துக் கொண்டு சத்தமில்லாமல் அழுதான். ஆனாலும் சத்தம் வந்தது.

"ஊருக்கு போய்றலாம் மாமா... இங்க என்ன மனுச பயலுக இப்பிடி இருக்கானுங்க.... முன்ன பின்ன பொம்பளங்கள பாக்காத மாதிரி... கழுதையாட்டம் இருக்கானுங்க... இப்பிடியா காஞ்சு கிடப்பானுங்க... இவுனுங்க பொண்டாட்டிகல்லாம் என்னத்த புடுங்கிட்டுருக்காலுக..." பேசிக் கொண்டே கடைக்காரர் பக்கம் கழுத்தை சாய்த்து... "அய்யா எங்கூருல நாங்கல்லாம் ஆத்துல தான் குளிப்போம்.. ஒரு பைய எட்டி கூட பாக்க மாட்டான்... அவ்வளவு கவுரவமா நடந்துக்குவாங்க... இங்க எல்லாரும் மொட்டை பயலுகளா இருக்கானுங்க... ஒருத்திய மூணு பேரு போட்டு செய்யறானுங்க....த்தூ எந்திரி மாமா.. ஊருக்கு போயி பேச்சியம்மன் ஆத்துல குளிச்சிருவோம்... எல்லாம் சரியா போயிடும்.." என்று மாமாவை ஏக்கத்தோடு பார்த்தாள். அதன் நீட்சியில்..."நான் செத்தரவா மாமா..." என்ற சொல் தொண்டைக்குள் கையேந்தி கதறியது. வாயை பொத்தி கண்ணீரை துடைத்த போது வாய் கோணி கண்ணீர் தகித்தது ரத்னாவுக்கு.

கொஞ்சம் நேரம் அங்கே பேச்சில்லை யாரிடமும். அமைதியாய் எதோ என்னவோ தன்னை ஆக்கிக் கொள்ள முயலுவது போல ஒரு பேரமைதி.

நெஞ்சத்தில் குருதி ததும்ப... அதே பெட்டிக்கடையில் பன்னு வாங்கி டீயில் தொட்டு தின்கிறார்கள்.

"எப்பிடியாவது பொழைச்சு.... இருக்கற வாழ்க்கைலருந்து வேறொரு வாழ்க்கையை புடிச்சர்னுனுதான இத்தனை தூரம் வந்து தனியா ஆக்கி தின்னுகிட்டு... ராத்திரி பகல்னு பாக்காம பைக்கு கம்பனில வேலை பாக்குறது. இப்பிடி போட்டு ஒண்ணுமில்லாம பண்ணிட்டானுங்களே... இல்ல..... ஏதாவது பண்ணனும் புள்ள" என்றவன் கடைசி வாய் பன்- ஐ வேகமாய் மென்றான். அவன் கண்களில் பெரும் அமைதி சுழன்றது.

"தம்பி அவுங்கள ஒண்ணுமே பண்ண முடியாது... இன்னும் இங்க தான் இந்த புள்ள சுத்திகிட்டுருக்குன்னு தெரிஞ்சா மறுபடியும் ராத்திரிக்கு தூக்கிட்டு போய்டுவானுங்க.. சில காரியங்கள விட்டு நாம தான் ஒதுங்கிக்கனும் தம்பி... இல்லாதவன் சத்தம்

காட்டக்கூடாது... வேற என்ன பண்ண. நம்ம நியாயம் தர்மம் எல்லாம் அவுனுங்கள ஒன்னும் பண்ணாது. பொறுக்கிங்க... கொலை பண்ண கூட தயங்க மாட்டானுங்க... பேசாம ஊர் பக்கம் போய் சேருங்க..." கடைக்காரர் கடைவாய் பல்லுக்கும் கேட்காத சத்தத்தில் அறிவுறுத்திக் கொண்டிருந்தார்.

பசி கொஞ்சம் தீர்ந்திருக்க... பொதுவாக ஓர் ஆசுவாசத்தை எழுந்து நின்று சடவெடுத்து கண்டாள். அதே நேரம் அனிச்சையாக இடது பக்கம் நகர்ந்திருந்த சுடிதார் பேண்ட்டின் முனையை.. கையை வயிறு பக்கம் நகர்த்தி இழுத்து தொப்புளுக்கு நேராய் நிறுத்தி நாடாவின் முடிச்சை இன்னும் இறுக்கினாள். கசங்கி சுருங்கி அழுக்கேறி இருந்த மேலாடையை சுருக்கு நீக்குவது போல சரித்து.... அழுகை தட்டி விட்டு ஒரு மாதிரி சரி செய்து கொண்டாள். கூந்தலை அவிழ்த்து மீண்டும் இறுக்கி கட்டிக் கொண்டாள்.

"இல்ல கிளம்பு.... போயி கேட்ருவோம்.." என்று இன்பாவின் கையைப் பற்றி தீர்க்கமாய் இழுத்தான். அவனால் ஏதாவது செய்யாமல் இருக்க முடியவில்லை. உள்ளேயும் வெளியேயும் தொடர் அனல் காற்று.

"தம்பி... வேண்டாம்... உசுராவது மிஞ்சும்... போய்டுங்க... ரெம்ப மோசமானவனுங்க..." என்றார் பெரியவர். அவர் இம்முறை தலையை கடையை விட்டு சற்று வெளியே நீட்டி இருந்தார். அவர் கண்களில் காலத்துக்கும் சேர்ந்திருந்த பயம்.

"என்னங்கய்யா பேசறீங்க... இதுவே உங்க வீட்டு புள்ளைக்கு நடந்தா இப்டி தான் பேசுவீங்களா..... நாலு பேரு போய் கேக்க மாட்டிங்களா... ஒரு நியாயம் தர்மம் வேண்டாமா...!" ஓடி வந்து மூச்சிரைக்கும் ஒரு பசித்த சிறுவனைப் போல அழுதான்.

"இப்ப எதுக்கு நீ அழுதுட்டுருக்க.. நான் என்ன செத்தா போய்ட்டேன்..." பேசிக்கொண்டே அவளும் அழுதாள். சத்தமில்லாமல் ஓர் ஒப்பாரி அங்கே சாவுக்கு ஏங்கியது.

அவர்கள் அழுகையை சற்று ஆழமாய் பார்த்த கடைக்காரர் அருவியில் இருந்து எட்டி குதித்தவர் போல... அமைதியில் இருந்து எதையோ அறுப்பது போல...." எங்க வீட்டு புள்ளைய கூட ஒரு ராத்திரி தூக்கிட்டு போய்...." பெரியவர் விசும்பினார். திகைத்து அவரையே இருவரும் பார்த்தார்கள். அவர்களின் அழுகைக்கு மறதி நிம்மதி சில நொடிகளுக்கு.

"போலீஸ் கேஸ் வாபஸ் வாங்கலனா.... என் பொண்டாட்டியையும் தூக்கிட்டு போய்டுவோம்ன்னு சொன்னானுங்க. குடிச்சிட்டு விழுந்து கிடந்தா என் புள்ள வேற ஒன்னு இல்ல.. இனி கண்டிச்சு வளக்கறேன்னு சொல்லி மூடிட்டு வீட்டுக்கு வந்துட்டோம். நாமெல்லாம் அண்டி பொழைக்கற ஆளுங்க தம்பி... மூடிட்டு தான் இருக்கணும்..." என்ற

கடைக்காரரின் வாய் பேசி முடித்த பிறகும் சொற்களில் உழன்று கொண்டிருந்தது.

"அண்டி பொழைக்கறவன்னா அடிமையா அய்யா... இதுவே அவன் வீட்டு புள்ளய யாராவது இப்பிடி பண்ணினா... அவன் ஒத்துக்குவானா... இப்பிடியே விட்டா யார் தான் இதை கேக்கறது.. இல்ல புள்ள வா.. போய் கேட்ருவோம்.. என்ன ஆகுதுன்னு பாத்துடுவோம்.. மனசு அப்ப தான் ஆறும்..." என்று அவள் கையைப் பற்றி இழுத்துக் கொண்டு நடக்க ஆரம்பித்தான் ரத்னா.

"கார் பைக் தயாரிக்கற ஏரியா இது. காரோட காரா பைக்கோட பைக்கா எல்லாருமே இங்க எந்திரங்க தான்ன... இந்த பையன் வேற சொல்ல சொல்ல கேக்காம போறானே... கொன்னு பின்னால இருக்கற தோட்டத்துல புதைக்க போறாங்கனுங்க..." முனங்கி கொண்டே கடவுளை வேண்ட ஆரம்பித்து விட்டார்.. ஒரு கை அற்ற அந்த கடைக்காரர்.

*

"ஸ்ஸ்ஸ்.... சத்தம் போடாத.. அதுக்கு தான் காசு குடுத்தேனே.. பெரிய பருப்பு மாதிரி தூக்கி வீசிட்டு போய்ட்டா..." என்று சொற்களை ரத்னாவுக்கு வீசி விட்டு பார்வையை இன்பலட்சுமி மீதி சிதற விட்டான்.. பொறுக்கி. நாக்கு ஒரு முறை வாயில் பாம்பு விஷத்தை தடவியது.

"கொஞ்சம் கூட மனசாட்சி இல்லாம இப்பிடி பண்ணி இருக்கீங்க... காசு குடுத்தா சரியா போய்டுமா..." பேசிக்கொண்டே சட்டென முன்னேறி பளாரென ஓர் அறை வைத்தான் ரத்னா.

திக்கென்று கண்களில் பொறி கலங்க... பார்த்த பொறுக்கி... "அடிங் கொம்மா.. எங்க வந்து யார் மேல கை வைக்கற...!" என்று எகிறி ரத்னாவின் நெஞ்சிலேயே ஓங்கி உதைத்தான். உதைத்த மறுகணம் ரத்னா சுருண்டு விழுந்து வயிற்றை பற்றிக் கொண்டு துடிக்க...." டேய் பொறுக்கி உன்ன என்ன பண்றேன் பாரு..." என்று தலையை குனிந்து கொண்டே அவனை நோக்கி முன்னேறி முட்டி தள்ளினாள் இன்பா. அதே கணம் திரும்பி ஓடி வந்து மாமாவை தொட்டு... என்னாச்சு மாமா.. எழுந்திரு.. எழுந்திரு என்று கத்த கத்தவே முட்டியதில் சரிந்து சுவரில் சரிந்த பொறுக்கி..... தடுமாறி எழுந்து வேட்டியை மடித்து கட்டிக் கொண்டு...." என்ன தைரியம்... கொன்னு போட்டர்றேன் பாரு..."முனங்கியபடியே நாக்கை கடித்துக் கொண்டே முன்னேறி வந்து இம்முறை அவள் முதுகில் திம்மென உதைத்தான்.

குப்புற விழுந்தவளுக்கு முன் பற்கள் தெறித்து விட்டன. சூடான ரத்தம் வாய் நிறைந்து வார்த்தைகளை துப்பியது.

"மாமா மாமா... போயிரலாம் போயிரலாம்..." என்று கத்த கத்தவே கையை ஊன்றி சுவர் பற்றி மூச்சை பிடித்துக் கொண்டு எழுந்த ரத்னாவின் கையில் அங்கு இருந்த பூந்தொட்டி ஒன்று வாகாக மாட்டியது. எடுத்த வேகத்தில் பொறுக்கியின் கால் முட்டியில் சாத்தினான். ஒரு கணம் நிலை தடுமாறிய பொறுக்கிக்கு மூச்சு வாங்க ஆரம்பித்து விட்டது. முட்டியில் இருந்து ஒழுகிய ரத்தம் அவனை பதற வைத்து விட்டது. காலை தரையில் ஊன்ற முடியாமல் நொண்டி நொண்டி அங்கும் சுதாரித்து கொண்டே இம்முறை இன்னமும் மூர்க்கமாக கோபம் தறிகெட்டு தலைக்கேற... ரத்னாவின் கையை சுழற்றி பிடித்து முறுக்க... அதே நேரம் தடுக்க வந்த இன்பாவின் முகத்தில் தொடர்ந்து நாலைந்து அறை அறைந்தான். கை கலப்பில் அவனோடு மல்லுக்கு நிற்க... அவன் கைக்குள் இன்பாவின் விரல்கள் மாட்ட.. அதை அவன் வெறி கொண்டு மடக்கி திருப்ப.. ஒரு விரல் உடைந்த சத்தம் பட்டீரென்று அவளை குரலற்று வாய் திறந்து கதற வைத்தது. ஆவென திறந்த வாய் மூடுவதற்கு நேரம் பிடித்தது. மூச்சு உள்ளேயும் போகாமல் வெளியேயும் வராமல்.. ஒரு பிரமை பிடித்த வலி தேர்ந்த சூடு அவள் முகத்தில் கொப்பளித்தது.

தொண்டைக்குள் எழும்பிய கதறல்.. தூரத்தில் எங்கோ ரயிலில் மோதுவது போல இருந்தது. கண்களை கட்டிக் கொண்டு தலை சுற்றி... தடுமாற செய்ய... கையை தொங்க போட்டுக் கொண்டே முன்னேறிய இன்பா... அவன் மேல் தாவி விழுந்து பிராண்டி... அவன் தொடை சரியாக வாயில் மாட்டி கொள்ள... கடிக்க ஆரம்பித்து விட்டாள். பற்கள் செதுக்கிய வட்டத்தில்... பர பரவென தொடையில் இருந்து எழும்பிய பெரும் வலி... பல்லு பல்லாய் விஷம் ஏறுவது போல உடம்பில் சுழல ஆம்பிக்க... வலி தாங்காமல் ரத்னாவின் கையை அனிச்சையாக விட்டு விட்ட பொறுக்கி...கடிபட்ட இடத்தை விடுவிக்க முழு பலத்தையும் கொண்டு அவள் தலையைப் பிடித்து தள்ள வேண்டி இருந்தது. தலை முடியை கொத்தோடு பற்றி இழுத்து ஆட்டி அவள் கவனத்தை திசை திருப்ப.. தலையில் வலி தாங்காமல் எச்சில் வழிய பின்னோக்கி சரிந்து விழுந்தாள்.

ஒரு கரப்பானின் கடைசி நொடியை அந்த அறையில் அங்கும் இங்கும் சூடு பறக்க சுழல விட்டான் பொறுக்கி. அதே நேரம் வேகமாய் பொறுக்கி தலை முடியை பற்றி கீழே சரித்து தள்ளி சாய்த்து... அவன் முதுகில் இடுப்பில் சரமாரியாக மிதித்தான் ரத்னா. ஒவ்வொரு மிதிக்கும் ஒரு சொல் சொல்லொணா வார்த்தையில் வந்து கொண்டிருந்தது. தூ தூவென துப்பிக்கொண்டே இருந்தது அவன் வாய். ஆனாலும் திமிறி எழுந்த பொறுக்கி கிறுக்கு பிடித்தவன் போல உடம்பை அலசிக் கொண்டு எதிர் தாக்குதல் செய்ய... கன்னம் கிழிந்து உதடு பிளந்து ரத்தம் கொட்ட தடுமாறி சுவரோரம் சரிந்தான் ரத்னா.

"என்ன..... என்னவோ சத்தம்....! என்பது போல மெல்ல வீட்டுக்குள் நுழைந்த இன்னொரு பொறுக்கி.. வீட்டுக்குள் நடக்கும் விபரீதத்தை புரிந்தும் புரியாமலும்.. "ஐயோ அண்ணே... அண்ணே என்னாச்சு... அண்ணே..."- கத்திக் கொண்டே அவர்களை நோக்கி ஓடி வந்து பொறுக்கியை தாங்கி பிடித்து... நிலைமையை புரிந்து கொண்டான். அவன் கண்கள்

எதிரே நின்றிருந்த இருவர் மீதும் வெஞ்சினத்தோடு விஷத்தை கக்கியது.

"பசங்கள எங்க....?" என்று சூட்டோடு சூட்டாக கேட்க... "அம்மா வந்துருக்குன்னு நீங்க தான வீட்டுக்கு போக சொல்லீட்டிங்க... இதுங்க ரெண்டுக்கும் பசங்க வேணுமா... நான் போதாதா... விடுங்கண்ணே " என்று அவர்களை நோக்கி வேகமாய் எழுந்து முன்னேறியவன்... இருவரையும் மாறி மாறி அடித்து உதைத்தான்...

"எங்க வந்து யார் மேல கை வெச்சிருக்கீங்க... சாவடிக்காம விட மாட்டேன்.."

மிருகத்தனமான தாக்குதல். அதற்குள் கொஞ்சம் ஆசுவாசம் பெற்று விட்ட பொறுக்கி நம்பர் ஒன் "இதுங்களை பொறுமையாக ஆற அமர அடிச்சே கொல்லனும்..." என்று சொல்லிக் கொண்டே நாற்காலியில் அமர்ந்து காயத்தை துடைத்துக் கொண்டிருக்க... கண் இமைக்கும் நேரம் தான் நேரம் கூடவும் அதே நேரம் குறையவும். உடைந்த விரலோடும்.. மூட்டு நகர்ந்த காலோடும்.. தலை உடைந்து வழியும் ரத்தத்தோடும்.. பல் உடைந்த வாயோடும்.... கன்னம் பிய்ந்த... மூக்குடைந்த.... கழுத்து வீங்கிய என்று இன்பாவும் ரத்னாவும்... உள்ளத்தின் பலத்தின் உண்மையின் தீவிரத்தின்... தங்களின் வாழ்க்கையை இழுத்து மூச்சு சேர்த்து தம் கட்டி.... பொறுக்கி நம்பர் டூவை கீழே தள்ளி கட்டி புரண்டு.. மேலேறி அமர்ந்து ரத்னா கழுத்தை நெறிக்க அதே நேரத்தில் இன்பா அவன் காதை கடித்து எடுத்து விட்டாள். எல்லாம் மறந்து கேட்பதெல்லாம் குருதி வழியும் குழாய் தான் போல... ஆஅஹ்வென காதை பிடித்துக் கொண்டு சுழல மறந்த பூமியை தலை மேல் வைத்து சுருண்டு விட்டான்... பொறுக்கி நம்பர் டூ.

விபரீதம் உணர்ந்த நம்பர் ஒன் பொறுக்கி ரத்னாவின் வலது காலை...படுகெட்டியாக பற்றி தர தரவென இழுக்க... அவன் கைகள் நம்பர் டூ பொறுக்கியின் கழுத்திலிருந்து விடுபட்டு... ஏதொன்றை பிடித்துக் கொள்ள பரபரவென அங்கும் இங்கும் தரையில் அடித்து பிராண்ட....நகம் உடைந்து... உள்ளங்கை கீறி.... குருதி கொப்பளிப்புகள் கூடவே கொந்தளிப்புகள். அதற்குள் பிடித்திருந்த காலை... பலம் கொண்டு திருப்பி மூட்டு- ஐ நகர்த்தி இருந்தான். மூச்சில் பாம்பு கொத்தியது போல வலி ரத்னாவுக்கு. கத்தினான். காதுக்குள் இருக்கும் வாயில் பற்கள் நெறிபடும் சத்தம் மூளையின் மூலையில். அதே புள்ளியில்... காலத்தை நிறுத்தி பொறுக்கி நம்பர் ஒன் மீது கொய்யா மரத்தில் ஏறுவது போல ஏறி பரபரவென அவன் கண்ணுக்குள் விரலை விட்டு நண்டு பிடி போட்டு விட்டாள் இன்பா. அழுத்த அழுத்த... கண்ணுக்குள் இருக்கும் சிவப்பு தோல் பிதுங்கி... கண்ணில் நீர் கொட்ட... அந்த பக்க கன்னமே காய்ந்து உதிர்வது போல காட்டு வெயிலின் தகிப்போடு தடுமாறி பலம் இழந்து... ரத்னாவின் காலை விட்டு விட்டு பரபரவென பின்னால் ஒரு பைத்தியக்கார அசைவோடு தெறித்து விழுந்து தடுமாறினான்.

கண்ணை அழுந்த பிடித்துக் கொண்டு மேலே விழுந்து கிடக்கும் இன்பாவையும் பிடித்துக் கொண்டு... உடல் நடுங்க... வேர்த்து பூத்த பூதம் போல கிடந்தவனை தலை மயிரை கொத்தாக பிடித்து இழுத்து புடுங்கினான் ரத்னா. நிற்க முடியாத வேதனையிலும் உள்ளே புகுந்த கொண்ட கடவுளின் ஆட்டம்... நிலை கொள்ளவில்லை. சாது மிரண்டால்.. சாத்தான் ஆகும் என்பது காண கிடைத்த காட்சி. பயம் நிரம்பி தன்னை வியர்த்துக் கொட்டிய அந்த அறை முழுவதும் ரத்த சகதியில். சாத்திரம் மாற்றிக் கொண்டிருந்தது காலம்.

பிய்ந்த காதை பிடித்துக் கொண்டு மயங்கி கிடந்தவன் மண்டை மீது ஒரு ஏறு ஏறி இறங்கிய இன்பா பாதி பிசாசாக தெரிந்தாள். உடம்பில் எங்கெல்லாம் எதுவெல்லாம் உடைந்ததோ... ஆனாலும்... வேகம் குறையவில்லை. மரண வேகத்தில் மண்டை நிறைய மத்தள சத்தம்.

என்ன நடக்குது என்று மாடியில் இருந்து மெல்ல இறங்கி கொண்டிருந்த பொறுக்கியின் தாய்... வெள்ளாடையில்... வெண்மேகம் போல மிதந்து வருவதாக வந்தது.

சலனமில்லாத பார்வையில்.... ஒருகணம் அங்கே நிகழ்ந்து கொண்டிருந்த சண்டை நின்றது.

எல்லார் பார்வையும் ஒரு புள்ளியில் குவிந்து விலகியது. நீ உள்ள போம்மா என்பதாக கை ஜாடை செய்தான் பொறுக்கி நம்பர் ஒன். எல்லாம் அறிந்த தாய்க்கு சொல்லாமலே புலப்பட்டு விட்டது. இன்னும் எத்தனை பாவத்தை சுமப்பது போல கவலை சிமிட்டி பார்த்தாள்

மீண்டும் கையில் கிடைத்த இன்னொரு பூந்தொட்டியை எடுத்து அவன் பின் மண்டையில் இறுக்கி சாத்தினான். நின்றிருந்த சண்டையை மீண்டும் தொடங்கிய புள்ளியில் சரியத்தான் முடிந்தது பொறுக்கிக்கு. அவன் தலை குப்புற விழுந்து கண்கள் நடுங்க பார்த்தான். வழக்கத்துக்கு மாறாக தன் பிள்ளை அடி வாங்கி சரிந்து கிடந்த காட்சியை அந்த தாய் வெறித்து பார்த்தாள். கொஞ்சம் சிரித்தது போல தான் இருந்தது.

வெறித்த வெஞ்சினம் கசிந்த பார்வையில்...விறு விறுவென அந்த தாயை நோக்கி ஓடிய இன்பா... நொடியில் அவளை மாடி படியில் இருந்து இழுத்து கீழே வீசினாள். பட் பட்... பட் பட் .... பட் பட் ..... பட் பட் ..... பட் பட்...என தலை படிக்கட்டில் பட்டு கீழே வருகையில் ரத்தம் பீய்ச்சி அடித்தது.

அவன் வேண்டாம் என்பது போல ஜாடை செய்ய செய்ய... அவனை பார்த்துக் கொண்டே ரத்னா... அந்த அம்மாவின் மீதேறி அமர்ந்து கழுத்தை நெறிக்க ஆரம்பித்து விட்டான்.

பொறுக்கியின் நகர முடியாத உடல் நடுங்கியது. நேற்றிரவு இன்பாவை அம்மணமாக கட்டி

வைத்து புணர்ந்த காட்சி ஒரு கணம் பெரும் பாறாங்கல்லாய் அவன் தலை மேல் இறங்கியது. கண்களில் வழிந்த ரத்தம் முழுக்க பாவம். உதறி உதறி நடு ஹாலில் கால்களால் காலத்தை நிறுத்த போராடும் அந்த தாயின் கால்களை அழுந்த பிடித்துக் கொண்டு கண்கள் விரிய பார்த்த இன்பா.... கூந்தல் அவிழ்ந்து ஒரு யட்சியை போல தெரிந்தாள். தாயின் மரணத்தை இத்தனை பெரிய புடுங்கியாக இருந்தும் ஒன்றும் செய்ய முடியவில்லை என்ற இயலாமையில் ஒரு செத்த பாம்பை போல அந்த பொறுக்கி வெறுமனே பார்த்தான். அவன் கண்களில் குருதி தாண்டி கண்ணீர் வழிய ஆரம்பித்தது. ஸ்தம்பித்தலின் வழியே நகரமுடியாத நடுக்கத்தை கெஞ்சி கெஞ்சி கொட்டினான்.

"ஒண்ணுல்லாதவனை என்ன வேணாம் பண்ணலான்னு நினைக்கற உன்ன மாதிரி பொறுக்கிகளோட நினைப்புக்கு இந்த பலி தான் பதில். சாவு தான்டா பெருசு.. அதுக்கே நாங்க தயாராகிட்டோம்... அப்புறம் என்ன.. வர சொல்லு.....கூலிக்கு கொல பண்ற உன் எல்லா நாய்களையும் வர சொல்லு... பாத்தர்லாம்...... முடிஞ்சளவு கொன்னுட்டு தான் சாவோம்..." என்ற மாமாவை இறுக கட்டி கொண்டு முத்தமழை பொழிந்தாள் இன்பலட்சுமி.

கோபம் கோபம் கோபம்... தீரா கோபத்தின் வேகம் அந்த வீட்டை அடித்து நொறுக்கியது. பொறுக்கி கீழே கிடந்து மூச்சு வாங்க பார்த்துக் கொண்டிருந்தான். அவன் கண்களில் வேறு வழியே இல்லாத மரண பயம். மௌனத்தில் ஒன்றுமில்லாத பிணத்தை தன் மீது சுமப்பது தான் சரி என்பது போலவே கிடந்தான்.

அவன் அருகே சென்று அவனையே உற்று பார்த்த இருவரும் தூவென துப்பினார்கள்... "த்தூ பொறுக்கி..."

பல்லு போயி... விரல் உடைந்து...கன்னம் பிய்ந்து... மண்டை உடைந்து ரத்தத்தில் நனைந்திருந்த இருவரும் ஒருவருக்கொருவர் கைத்தாங்கலாக பிடித்துக் கொண்டே நொண்டியபடியே வீட்டை விட்டு வெளியேறினார்கள்.

அவர்கள் ஒரு போர்க்களத்தில் இருந்து வெளியேறினார்கள். இனி என்ன நடந்தாலும் எதிர்கொள்ளும் கோபத்தை அவர்கள் தக்க வைத்திருப்பார்கள். அவர்கள் போன திசை நோக்கி ஒற்றை கையால் கும்பிட ஆரம்பித்திருந்தார் பெட்டிக்கடைக்காரர். இன்னும் அனல் காற்று ஓய்வதாக இல்லை.

—

கவிஜி.

# தனிமையின் துளிவிசம்

நரைத்த இதயத்தின் சுவர்களில்
உறிந்து உதிர்கிறது
அழுக்கேறி திரிந்த வண்ணங்கள்
நடுங்கும் கால்களில்
ஊன்றுகோலுடன் நடக்கும்
சாலைகளெங்கும்
ஒளிமங்கிய பிம்பங்கள்
எதிரும் புதிருமாய் நிழலாட
வாழ்தலின் பெருஞ்சுமை
உயிரின் நடுமுதுகைத்
தீர்மானித்து நசுக்குகிறது
அதீத வலிகளோடு வாழப்பழகி
நெடுமூச்சுடன் நாட்களைக் கடத்த
தெறிந்த முகங்களின்
அலட்சிய கீறல்கள்
விழிகளின் திரையை
ஆழக்கீறி கண்ணீர் இரசிக்கிறது
பொத்திக்காத்த குஞ்சுகள்
வசப்பட்ட வானத்தில்
சிறகடித்துச் சிலாகிக்க
சிதைந்த கூடுகளில்
சுள்ளிகளோடு மிச்சமுள்ளவை
பழகிய பழைய நறுமணமும்
கொஞ்சம் துர்நாற்றமும்
சாளரத்தினூடே கசிந்துவரும்
மென்காற்றில்
ஓய்ந்து இலயித்திருக்க
கடந்தகாலத்தின் புகைச்சூழ்ந்து
அமர்ந்திருக்கும் நாற்காலியெங்கும்
குப்பையென மண்டியுள்ளது
வாழ்ந்ததின் சருகுகள்
யாருமற்ற வனத்தில்
கிழடுதட்டிய மிருகத்தைச் சாய்க்க
வேடனின் அம்புவேண்டாம்
தனிமையின் துளிவிசம்
போதுமானதாயிருக்கும்.

# பசித்த தேடல்

உனக்கும் எனக்குமான
வரையறுத்த உறவில்
ஏகபோகம் யாவற்றிற்கும்
நிரந்தர பலிகடாவாக்கி
சாமர்த்தியமாய் வகுத்த
அடிமை சட்டங்களை
மனப்பூர்வமாய் நேசிக்க
பழகிவிட்டிருக்கிறது
நூற்றாண்டுகளின் சாபம்
வா என்றால் வருகிறேன்
போ என்றால் போகிறேன்
நில் என்றால் நிற்கிறேன்
அமரென்றால் அமர்கிறேன்
கொடுயென்றால்
உயிரையும் மானத்தையும்
தயங்காமல் கொடுத்து
சருகென உதிர்கிறேன்...
கொழுத்த தொந்திகளின்
பசித்த தேடலுக்காய்
அந்தரத்தில் தொங்கி வாழ்வோன்
இரக்கமின்றி படைத்து வீசிய
மதிப்பில்லாப் படையல் நாங்கள்
எங்கள் வலைகளின் மீன்கள்
உங்கள் வீட்டுக் குழம்பு சட்டியில்
செத்தே மிதக்கின்றன
ஒருபோதும் விடிவதில்லை
எரிந்து சாம்பலான
எங்கள் வாழ்வின் கிழக்கு.

# மழைக் கவிதை

எப்பொழுதெல்லாம்
வானம் இரசணைமிகு மழைக்கவிதையை
எழுதத் துவங்குகிறதோ
அப்பொழுதெல்லாம் தாவரங்கள்
தன் இலைத்தாள்களை
நான் நீயென்று
ஏந்தி நிற்கின்றன பூமியெங்கும்
குளிரும் தண்ணீர் எழுத்துகளால்
வரிவரியாய் எழுதி
அனைத்தின் முகத்தையும்
பூக்களால் மகிழச்செய்யும்
ஒப்பற்ற பிரியம்
மேகத்தோடு இணைந்த
பெருங்காதலால்.



—
பொன். தெய்வா,
ஐவேலி.

---

# நினைவு தூண்.....!!!!

மறக்கவே
நினைக்கிறது மனது
மறக்க முடியாத
மறதி நோயை
மடியில் வைத்துக் கொண்டு
அலைந்து
கொண்டிருக்கிறது காதல்,

கூண்டில் அகப்பட்ட
சிறுத்தையாக
வெளியேற முடியாமல் மனச்சிறைவுடன்
போராடிக் கொண்டிருக்கிறது மனது,

பூட்டி வைத்த
மனதுக்குள்
புதையல்களாகவே
புதைந்து கிடக்கிறது
சிறைப்பட்டவளின்
சில ஞாபக துளிகள்,

தூண்டிலில் மாட்டிய
குரவை மீனாக
இதய பேழையிலிருந்து
நழுவி துள்ளிக்
குதித்துக்கொண்டிருக்கிறது
ஆறாகிய இதயம்,

அங்கும் இங்கும்
எங்கும்
எதிலும் அதிலும்
காற்றாகிப் போயிருந்தது
அவனுடைய
ஞாபக சிதறல்கள்,



—
கவிஞர் ச.சக்தி,
அழகு பெருமாள் குப்பம்,
பண்ருட்டி.

# அடையாள அட்டையால் அறியப்பட்டவன்

என்னிமைகளை மென்மையாய்
பற்றியிருக்கும் உறக்கத்திற்கு தெரியும்
எனது இறுக்கமான வலிகள்.
இளகிய மனதில் நிறைய துயரங்கள்
இருளை மென்று துப்பும் ராத்திரிக்கோ
எண்ணற்ற இடர்கள்.

இன்னல் முயற்சிகளை அவிழ்த்து
முன்னேறத் துடிக்கும் கணங்களில்
என் பாதை எங்கும் தடைக்கற்கள்
விரக்தி மேலிட என்னிலிருந்து
என்னைப் பிய்த்தெறிய முயற்சிக்கிறேன்.

சட்டென விழித்துக் கொண்டு
மகுடிக்கு படமெடுத்தாடும் அரவமாய்
என்னை மயக்கி தடுத்து நிறுத்துகிறது
என் மனசாட்சி.

அடர்த்தியாய்
சில சொற்பாணங்களை
அதன் மேலே ஏவி விட்டு
அவசர அவசரமாய் குளிருக்கு நடுங்கும்
நிலவை அணைக்கத் துடிக்கும் மேகமாய்
விரையத் துடிக்கிறேன்.

இடர்கள் நிறைந்த இந்த ராத்திரியில்
நீளம் குறைந்த பின்னிரவுக் கனவில்
சூழ்ந்த பெரும் புகை மூட்டத்தில்
என்முன் தோன்றுகிறார்கள்
இறைத்தூதர்கள்.

எவ்வளவு சொல்லியும் என்னை
மனிதனென்று ஏற்காத அவர்களிடம்
என் தேசம் எனக்குத் தந்த
அடையாள அட்டையை
காண்பிக்கிறேன்
வலிகளையும் எண்ணற்ற துயரங்களையும்
சுமந்துவரும் பாவப்பட்ட மனிதனென்று
அப்போதுதான் அவர்களென்னை
தீர்மானிகிறார்கள்.

## மலரும் நினைவுகள்

மரணத்தின் விளிம்பிலிருக்கும்
என்னைப் பார்க்க வந்திருக்கிறாய்.

பஞ்சடைத்திருக்கும் விழிகள் வழியே
கண்ணீர் வழிய
உன்னைக் கலங்கப்பார்க்கிறேன்.

ஏதேதோ சொல்ல எத்தனித்தும்
உதடுகளை விட்டுப் பிரியமறுக்கின்றன
வார்த்தைகள்.

என் போர்வையை விலக்கி
என் நெஞ்சுக் கூட்டை இதமாய்
நீவிவிடுகிறாய்.
உன் ஆறுதல் என்னை
ஆற்றுப்படுத்துகிறது.

நினைவிழைகளைக் கூர்த்தீட்டிக்
கூர்த்தீட்டி

இருவரும் அறுபதாண்டுகள்
பின்னோக்கிப் பயணிக்கிறோம்.

மலரும் நினைவுகள்
எதையும் சொல்லமுடியாமல்
உன் விழிகளும் கண்ணீரைக் கசிகிறது.

காலன் கணக்குத் தீர்க்க
எண்ணிக்கொண்டிருக்கும்
நாட்களில் கழிகிறதென் காலம்.

என் காதருகே
நெருங்கிவந்து உதறலோடு
ஏதோ ரகசியத்தைச் மொழிகிறாய்.

காற்றில்
மிதந்து வந்த உன் நேசச்சொற்கள்
இழுத்துக் கொண்டிருக்கும்
என் மூச்சுக்கூட்டை இன்னும்
அடர்த்தியாய் இறுக்குகிறது.

பஞ்சடைந்திருக்கும்
என்விழிகள் மீதமிருந்த கடைசி
கண்ணீர்த் துளிகளையும்
அக்கணத்தில்
உனக்காகக் கசிந்து முடிக்கிறது.

சுற்றியிருப்பவர்கள் நம்மிருவரையும்
உற்று நோக்குகிறார்கள்.
நீ சொல்லியது என்னவென்று
விழிகளால் என்னைத் துளைக்கிறார்கள்.

அந்த மனிதஜடங்களுக்கு
நீ சொல்லியதை
நான் எப்படிச் சொல்வேன்?

பால்யம் முதல் என்பால் கொண்ட
நட்பினாலும் அன்பினாலும்
கொள்ளைப் பிரியத்தாலும்
அந்த மயானத்தில் என்னருகிலேயே
நீ உனக்கொரு
இடம் போடச் சொன்னதை...!

—

கவிதை ஆக்கம்,
பாரியன்பன் நாகராஜன்,
குடியாத்தம் - 632602
கைப்பேசி: 9443139353



## வான் மழை

வான் மழையோ
மழை தரும் மகிழ்வோ
மகிழ்வின் உச்சமோ
உச்சம் தொட்ட மிச்சம்
இந்த நாணமோ
நாணமும் நழுவுதே
இவ்வேளையில்
தழுவுவது வான் மழையோ .....!!!

—

ச. இராஜ்குமார்,
திருப்பத்தூர் மாவட்டம்,
8867933021

# உண்மை தீபாவளி...!?

சேர்த்து வைத்த காசையெல்லாம்
பட்டாசு வெடித்துக் கரியாக்கும்.....?
பகட்டினை விட்டுவிட்டு...
ஆடையற்ற ஏழைகளுக்கு
ஆடை கொடுத்து மகிழ்வதுதான்...
மனித நேய தீபாவளி....!!

புதுப் புதுப் பலகாரங்கள்
பக்குவமாய் பல செய்து....!?
சொந்தம் மட்டும் தின்று மகிழாமல்.... !
குடிசைகளின் வாசல் நின்று...
கூப்பிட்டு கொடுத்து மகிழ்வதே...
நிஜத்தில் தித்திக்கும் தீபாவளி !!

தீய எண்ணமும் ...!
தீரா ஆசையும்..!
பொறாமை பேயுமாய்-
உள்ளே வாழும்
நரகாசுரன் அழித்து...?
உறவு போற்றினால்...
அதுவே அன்பு தீபாவளி....!

ஆதரவற்றோரை அரவணைத்து....!
முதியோர் இல்லம் விருந்தளித்து...!
அனாதை குழந்தைகளுக்கு இனிப்பு
வழங்கி....!
மாற்று திறனாளிகள் மனம்
குளிர்ந்தால்...!
அதுவே அனைவருக்கும்
அற்புத தீபாவளி....!!

பழைய கடன் தொலைத்து....?
புதிய கடன் தவிர்த்து ..?
உழைப்பின் பலனாய்
எல்லோருக்கும் எல்லாமும்
கிடைத்தால்....
அதுவே சுதந்திர தீபாவளி....!!

வாழ்த்துக்களை
வார்த்தைகளில் பரிமாறி.....!
மனதால் ஒன்று கூடி...
மகிழ்ச்சியில் மலர்ந்து....!
தீயன அழித்து எங்கும்...
தீப ஒளி ஏற்றினால்...!
அதுவே எல்லோருக்கும்
உண்மையில் தீபாவளி .....!!!

—

முனைவர். சா.சம்பத்,
தேசிய பயிற்சியாளர்,
மன்னார்குடி.



# அற்றைத் திங்கள்

நிலவோடு ஓர் இரவு
உரையாட வேண்டும்
உரையாடினால் கவிதைக்கான
நல்குரவு தீரும்

அன்று நிலவால் தான்
ஒரு கவள உணவு
தொண்டைக்குள் இறங்கியது

இன்றும் நிலவால் தான்
ஒரு காதல் உணர்வு
இதயத்திற்குள் அரும்புகிறது

உன் தாய் உனக்கு
நிலாவைக் காட்டிச்
சோறு ஊட்டிய
அதே நேரத்தில்

என் தாய் எனக்கு
நிலாவைக் காட்டிச்
சோறு ஊட்டியிருக்கலாம்

காட்டிய நேரத்தில்
நாம் இருவரும்
ஒரே கணத்தில்
அந்த நிலாவைப்
பார்த்திருப்போம்

அதனால் தான்
நான் இன்று
நிலவைப் பார்க்கும் போது
அதில் உன் முகம் தெரிகிறது

நீ அந்த நிலாவைக்
காணும் போது
அதில் என் முகம் தெரிகிறது

உன் முகம் கண்டு நான்
மதிமுகம் என்றால்
அது உவமை

முகமதி என்றால்
அது உருவகம்

இன்னும் அந்த
நிலவில் உள்ளன
உள்ளுறையும்
இறைச்சியும்.

—

மு. ஆறுமுகவிக்னேஷ்.

# உலகில் அமைதி வேண்டும்

நித்தம் நித்தம்
நாளிதழில்..
யுத்தம் கொள்ளும்
நாடுகளே..

பார்க்கும் நெஞ்சம்
பதற்றத்திலே..
பாவம் உயிர்கள்
சீற்றத்திலே..

இனத்தின் வெறியால்
போர்க்களங்கள்..
இடத்தின் வெறியால்
போர்க்களங்கள்..

மதத்தின் வெறியால்
போர்க்களங்கள்..
நிறத்தின் வெறியால்
போர்க்களங்கள்..

நிம்மதியை இழந்த
உயிர்களுமே..
அமைதியை தேடியே
அலைகின்றதே..

மனிதம் மறந்த
மனிதர்களால்..
மண்ணில் அமைதி
மறைந்ததுவே..

உலகில் நிம்மதி
நிலைத்திடவே..
மனதில் உறுதி
ஏற்றிடுவோம்..

# மூத்தோர் சொல்

மூத்தோர் சொல்லைக்
கேட்பதே நன்று...
இளையோர் இன்று
கேட்பதும் குறைவு...

அனுபவம் அங்கே
ஆயிரம் இருக்கும்...
அனைத்திலும் அழகாய்
அர்த்தங்கள் சிறக்கும்...

வாழ்வியல் முறையை
வார்த்தைகள் கொடுக்கும்...
வாழ்ந்து காட்டினால்
அகிலமே வியக்கும்...

உண்மை நிலையை
உணர்ந்தவர் அவர்கள்...
வாழ்வைச் சொல்லும்
வழித்தடம் அவர்கள்...

உவமை அனைத்தையும்
உயர்வாய் பார்ப்போம்...
அறிவுரை தவிர்த்தால்
எப்படி சிறப்போம்...



--
வாழ்வியல் கவி,
(சா.நாகூர் பிச்சை)
திண்டுக்கல்.

# பற்றற்று இருக்கவே

*அம்மணம் ஆனேன்!*
*அம்மணமும்*
*பற்றி பற்றுகிறது*
*இன்னொரு*
*அம்மணத்திற்கான*
*தேடலை..!*
-------------

*இருக்கும் என்று*
*நம்பிக்கையோடு*
*கேட்கிறார்கள்!*
*உண்மையில்*
*இல்லை என்பதை*
*எப்படி சொல்வது..!*
-------------

*மற்ற*
*பிள்ளைகளைக்காட்டிலும்*
*தன் பெரிய பிள்ளையையே*
*எல்லா பிரச்சனைகளிலும்*
*அனுசரித்து போகச்சொல்லி*
*கேட்கிறாள் அம்மா!*
*அவனும் தலையசைக்கிறான்*
*மரம் போல*
*கிளைகள் முறிந்து*
*விடக்கூடாதென!*
-------------

*பிள்ளைகள் பெற்றெடுத்தும்*
*இன்னும் விவரமற்றவனாகவே*
*இருக்கிறான் என்ற*
*கவலை அம்மாவுக்கு!*
*கட்டை காடேரும் வரை*
*பிள்ளைகளுக்காக*
*கவலைகொள்வது*
*அம்மாக்கள் மட்டுமே!*
-------------

*கூந்தலில்*
*சூடிய பூக்கள்*
*அழகாய் இருக்கிறது*
*மங்களகரமாய்*
*திருமணமானவள் போல*
*மகிழ்ச்சியுடன்!*
*சூடாக பூக்கள்*
*மிகுந்த வாட்டமாக*
*இருக்கிறது திருமணத்திற்கு*
*காத்திருக்கும்*
*முதிர்கன்னி போல!*
-------------

*அடையாள*
*உண்ணாவிரதங்கள்*
*பெரிதாய் பேசப்படுகிறது*
*எங்கும்!*
*உண்ண உணவில்லாமல்*
*கிடக்கும் பட்டினிகள்*
*மட்டும்  கடந்துபோகிறது*
*கவனிப்பாரற்று!*

—

மகிழை. சிவகார்த்தி.



# 1) நிழலோடு சில நிமிடம்....!

ஏமாற்றி கிடைத்ததில் இனிக்கிறது/
அம்மை கை சோறு/
இதுவும் கடந்து போகிறது/
ஏமாற்றலின் வாசலில்/

தூணில் மறைந்த/
மரத்தை தேடுகிறாய்/
மங்கையாய் புன்னகைக்கிறது/
குழந்தை கையில் மரப்பாச்சி/

யாரும் இல்லாத
இடத்தில்
வானம் மட்டும்
அனாதையாகிறது

என்னோடு முடிவதில்லை
பிறந்த இன்று
உன்னோடு தொடரவல்லது
நேற்றைய பொழுது

நீயும் நானும்
இல்லாத நேரத்தில்
நிழலும் நிழலும்
உரையாடுகின்றன இரவில்

# 2) வேறொன்றும் செய்துவிடவில்லை...

நான் ஒன்றும் கொடுத்துவிடவில்லை
அவர்களுக்கு
அவர்கள் கொடுத்த உயிரால்
அவர்களுக்கு
பெருமிதம் கொடுத்தேன்
அவர்கள் கொடுத்த படிப்பால்
அவர்களுக்கு பெருமிதம்
கொடுத்தேன்

அவர்கள் கொடுத்த
உறவால் அவர்களுக்கு
சந்த்திகளை கொடுத்தேன்..
வேறொன்றும் செய்துவிடவில்லை
நான்

எதிர்பார்ப்பு என்பது
வேறொன்றுமில்லை
உயிர் கொடுத்த அப்பாவின்
கைகளில் உடலோடு
கலந்து
புன்னகையுடன் கொடுக்கும்
அம்மாவின் விழிநீரை
துடைக்கும்
ஒரு விரல் செய்துவிடும்
பணியே.....

வேறொன்றும் செய்துவிடவில்லை
நான்
பிறப்பை தந்தை தாயெனவும்
வளர்ந்த பிறகு
தோழன் தோழியெனவும்
சந்த்திகளை பெயர்மாற்றம்
செய்தேன்
வேறொன்றும்
செய்துவிடவில்லை......!

# 3) உயர உயர.....

வழிகளெல்லாம்
வானை பார்த்தும்

பார்க்காத
குனிந்த நிலையில்
யாரோ ஒருவரின்
பாதத்தை பற்றியே
காதம் விரித்து செல்கின்றன

ஆங்கே உயரப் பறந்த
கழுகொன்றின்
சிறு இறகோடு
முடிந்துவிடவில்லை
ஆகாசம்...

வெப்பம் அனைத்து
துடிக்கும்
புழிவோடு முடிய
தொடர்கிறது
உயரப்பறந்த கழுகின்
பசியும்
துள்ள துடித்து
உள் நுழைய போராடும்
மண்புழுவின்
நுனியில் வானையே பார்த்தபடி
பரிதவிக்கும்
ஆண் முனையோ
பெண் முனையோ....

நூலோடு
அறுந்த
காற்றாடிக்கு
வானைத்தோட ஆசையும்
நூலறுந்த கவலையில்
பூமியை உதைத்தாடும்
குழந்தையின் கண்ணீரும்
வானுக்கும் பூமிக்கும்
ஆசைகளை
உயர உயர பறக்க செய்கின்றன...

## 4) கும்பிடாத வடிவம்

நிலைக்கதவுகளில்
மஞ்சள் குங்குமம் வைக்காத
இல்லங்களிலும்
வேப்ப மரங்களை இயற்கையாய்
பார்க்பவன் இல்லங்களிலும்
படிகார கற்களை
தலைகளில் உரச கட்டாதவன்
இல்லங்களிலும்
விரதங்களே இல்லாத புரட்டாசி
மாதங்களை தவிர்ப்பவன்
இல்லங்களிலும்
சிறு கொலுசணிந்து
ஆங்குமிங்கும்
விளையாடிக் கொண்டுதான் இருக்கிறாள்
அம்மன்
பேத்தி வடிவில்
தாத்தா பாட்டிகளுக்கு......!

## 5) வனத்தின் வாசம்

பட்டுகளின் நூல்வழியே
தடுமாறாமல்
நடைபோடுகிறேன்
இலைகளின் சுமை என்னை
மரத்தோடு சாய்க்கிறது
காற்றோடு உறவாடி
சற்று
மெல்லமாகத்தான்
மரத்தை அசைக்க செய்கிறேன்
தவறிவிழுந்த எறும்பிற்கு
கணமில்லாத
சறுகு பாய்ந்த இலை விழ வேண்டி...

விலங்குகள் எல்லாம்
சூரியனையும்
நிலவையும்

பார்த்தப்படியே
ஒவ்வொரு இரவையும்
சம்மளமிட்டு கழிக்கின்றன

சடசடவென பெய்யும் மழையின்
முதல் துளியில் தொடங்கி
மறுதுளியில் முடிவடையும்
சிறு சில்லெனும் ஈரப்பத்த்தில்
இளைப்பாறி மெல்ல மெல்ல நகர்கிறது
போர்வை போரத்திடாமல்
நடுங்கிடும் நத்தையின்
நெடியேறிய
வனத்தின் இரம்ய வாசனை.....!

—

கவிஞர். சே கார்கவி,
*Er. Prof.* சே. கார்த்திகேயன். *ME.*,
நாகப்பட்டினம்.



---

# மரபு வெளி:

## நேரிசை வெண்பாக்கள்:

### *1.* நாரைத்தடாகம்:

துள்ளும் கயலினமும் தோகை
மயிலினமும்
கள்ளும் வடிந்தொழுகும் காடு -
புள்ளலைக்கும்
சோலை புனல்பாய்ந்து அன்றில்
உடன்சேர்ந்து
மாலை அழகினையே பார்.

### *2.* அந்தி சிவப்பாக்க மந்தியதை நோக்கிடவே

விந்தைக் கடுவனார் ஆட்டத்தில் -
எந்தனது
சிந்தை மகிழ்ந்தாடும் பூக்கள் மணம்வீசும்
மந்தையாய் மான்மேயும் காடு.

### *3.* மூங்கில் இசையாகிக் காதல் உறவாடி

மாங்கனியை ஆட்டிவிடும் தென்றல் -
தேங்கியநீர்
நாரைத் தடாகம் நறுமணப் பூமலரும்
ஊரையே அழகாக் குமே!

—

இளங்கவி ச. வாசுதேவன்,
முதுகலைத்தமிழ் இரண்டாம் ஆண்டு,
இலக்கியத்துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்.

# 01-துளிப்பாக்கள்

மடித்த வெற்றிலையும்
கோபம் கொள்கிறதே
சிவக்கும் நாக்கு

உறங்கிய பின்பும்
கயல்விழிஎட்டிப்பார்க்கிறாள்
ஓ! வான்நிலா...

இரவில் கூடி
அலறும் சுள்ளிகள்
மூளும் நெருப்பு

நீளும் வரிகள்
இருட்டிலும் பேசுகிறதே
அடடே! படிக்கும் மாணவன்

ஆறுகளில் மட்டும்
அங்கங்கே ஓட்டை
மணல் திருட்டு

கல்லறை கட்ட
இடமில்லை
அதிகரிக்கும் காதலர்கள்

முறுக்குமீசையும் வீச்சரிவாளும்
தனியாய் பேசுகிறது
காக்கும் அய்யனார்

நாற்றத்தில் இறங்கியதும்
வயிறு நிரம்புகிறது
குப்பைத் தொழிலாளி

உளிகள் முத்தமிட
ஒளிபெறும் விழிகள்
செதுக்கும் சிற்பம்

அலறும் ஆம்புலன்சிற்குள்
கும்பிடும் சிறுவன்
சாமி அம்மாவ காப்பாத்து...

தள்ளுபடியிலும்
விலைபோகவில்லை
கண்காட்சியில் புத்தகங்கள்

குழந்தையின் சிரிப்பு
விழுந்து கிடக்கிறது
சிதறிய பருக்கைகள்

--------------------

அவளின் தூரத்துபார்வையில்
காதலிக்க தொடங்கியது
சன்னல்

இறக்கைகள் முளைத்ததும்
படபடவென அடித்தது
சன்னல்

சன்னல் கதவுகள் திறந்ததும்
ஒளிவீசத் தொடங்கின
அவளின் பார்வை

சன்னல்இரும்பு கம்பிக்குள்
மெல்லிய மனசு பேசுகிறது
முதிர் கன்னி

படபடக்கும் கதவோரமாய்
முனுமுனுத்துக் கொள்கிறது
இரகசிய காதல்

சன்னல் கம்பியும்
படபடத்து பேசுகிறது
காதலொடு வண்ணத்துப்பூச்சி

சன்னலைத் தழுவி
முத்தமிடுகிறது
காலைநேரத் தென்றல்

சன்னல் கதவுகள்
எழுதும் கவிதைகள்
சந்திப்போமா?

சன்னலைத் தொடும்போது
துடிதுடித்து கொள்கிறது
அவளின் இதயம்

சன்னலோரமாய்
முளைக்கும் செடி
புதிய காதல்

உடைந்த சன்னலும்
உரசிக்கொள்கின்றன
காதல் அத்தியாயம்

சன்னல்வீசும் ஒளியில்
பார்வை பெறுகிறான்
காதலுக்கும் கண் உண்டு

----------------

03-கவிதை

எங்கிருந்தோ எழுப்பிய
ஒலிகளின் இடுக்கில்
சிக்கிய மனமோ இன்னமும்
பல முடிச்சுகளை அவிழ்த்து
இலயித்துக்கொண்டுதான்
இருக்கின்றன.

கடைசி வரை பிதற்றிய
மனதின் மூலையில்
சின்னஞ்சிறு பட்டாசுகளாய்
வெடித்தெழும்போது மனம்
கடலலையாய் துள்ளி
எழத்தான் செய்கிறது..

விழிகளை கடித்து
துவைத்த பெரு ரசவாத
நீர்த்துளிகளெல்லாம்
வெகுண்டெழுந்து பிரியா
விடை பெற்றுத்தான்
செல்கிறது...

நகரும் முட்களைப் பார்த்து
நகரா பொம்மைகளாய்
முடங்கி கிடக்கும் மனப்
பொம்மைகளை தூக்கி
வீசித் தான் செல்லலாமே...

கட்டி வைத்து முட்டி மோதிய
மனதிற்கிடையே தட்டுத்
தடுமாற்றங்களாய் வெற்று
ஓசையாய் எழுப்பாமல்
இரசிக்கும் இசையாய்
பிரவாகிக்கலாமே...

ஒன்றாய் கட்டுண்டு கிடக்கும்
இருட்டு பள்ளத்தில் கரையேறி
அள்ளி இறைத்து முகம் ஒற்றிக்
கொள்ளுங்கள் அருகில் நின்று
தட்டியெழுப்பும் ஒளியை...

உள்ளத்தில் உதறிய
சிற்சில வார்த்தைகளை
களைந்து நீராடி கரைவாருங்கள்
தாளாத சுகங்களை கைகோர்த்து
செல்லுங்கள்...

—

ஞா. முனிராஜ்,
அருப்புக்கோட்டை.

---

## 1) பூந்தொட்டி

இருக்கும்
மண்ணிற்கேற்ப
நட்சத்திரப்
பூவுதிர்க்கக்
கற்றிருக்கிறது
குட்டிச்செடி

அருகே
குளமொன்றிருப்பினும்
கிழிசலிலைகளை
மட்டுமே உதிர்த்துக்
கொண்டிருக்கிறது
ஓர் அரசமரம்!

## 2) பொம்மை

விலையை
அறிந்ததும்தான்
உள்ளங்கையில்
ஏறியமர்ந்திருக்கிற
யானையின் கனம்
அறியவருகிறது
பாகனின்
சிந்தையில்!

## 3) தொட்டில் விளைவு

குழந்தை
சிணுங்கியதும்
உறங்கிக் கொண்டிருந்த
கிலுகிலுப்பை
முனங்கத்
தொடங்குகிறது!

## 4) புன்னகை

தலை கவிழ்ந்தும்
பல்லிளிக்கிறது
'போஸ்ட் மரம்!'

—

ரகுநாத். வ,
மதுரை.

# துளிப்பாக்கள்

பறக்கின்றன சிலுவைகள்
வானில்
பறவைகள்

நிதானமாய் சுவைக்க வேண்டும்
ஒரு கோப்பை தேனீரை
அலைப்பேசியை அணைத்து விட்டு

எழுத்துகளற்ற மனநூலை
மௌனமாய் வாசிக்கிறார்
தியானத்தில் புத்தர்

ஆரத்தி எடுக்கிறது
அந்தி வேளையில்
நீர் நிலையில் சூரியன்

இரவெல்லாம் அடைக்காத்து
பொரித்து வைத்தது வானம்
நட்சத்திரங்களை

பரந்த நீர்ப்பரப்பை
விழுங்கிக் கொண்டே வருகிறது
படரும் பாசிகள்

தொடர் வெளிச்சத்தால்
தோற்றுப்போனது
சாலையோர தாம்பத்யம்

—

பெ. விஜயலட்சுமி,
காஞ்சிபுரம்.





மா. நிரல்யா,
சிங்கப்பூர்.

# பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள் பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த திறவுகோல் இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த படைப்புகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் ஒண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப...
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் - சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம்பெற செய்ய...
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைபேசிக்கே மின்னிதழைப் பெற...
பகிரி: +91 8220567322

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய...

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

—

கி. மாணிக்கம்,
திறவுகோல் ஆசிரியர், குழு.